பிஸ்மில்லா ஹிற்றஹ்மா நிர்றஹீம்.

இஃது

ப்அந்த நாறுல்ஹூ° தாதற்சுமா

## யாஸையிதீ மாலை

இதில் நபிநாயகமவர்கள் பேரில்
அமரர்களுக்கதிபதியாகிய ஜிப்ரீல் அலைஹிஸ்ஸலாமவர்களா
லியற்றப்பட்ட யாஸைதீப் பைத்தும்
முன்னோர்கள் பாடிய

## சில முஃஜிஜாத்துகளுஞ் சேர்ந்த

# முகியத்தீன் மாலை.

ஹக்குதாலாவினுடைய கிருபாகரத்தங்கிய
நபிமுஹம்மது முஸ்தபா சல்லல்லாஹு
**அலைஹி வசல்லமவர்களுடைய ஹிஜரத் 471 வருஷ**
**முகையித்தீன் அப்துல் காதிரவர்களின்**
காரணங்களைப்பற்றிய முகியத்தீன் மாலையும் இதில்
அடங்கியிருக்கின்றன இவைகள் அரபுத்தமிழிலிருந்ததை
**இஸ்லாமிய்யா பிரசங்கநேசன் மானேஜர்,**
எஸ். எம். முஸ்தபாலெப்பை அவர்கள் உத்திரவின் பேரில்
சென்னை திருவல்லிக்கேணியில் வசிக்கும்
**ஆபீஸ் ஆலிம் த-உ நாகூர்மீரா லெப்பை,**
அவர்களால் முன்னிருந்த பிரதியில் சிலதை சீர் திருத்தி
சுத்த வெண்தமிழால் யாவரும் சுலபமானநடையில்
வாசிக்கும்படியான பாவனையில் யெழுதப்பட்டு

மானேஜர்
எஸ் எம் முஸ்தபா லெப்பை அவர்களின்
நிவாயத்தில் இஸ்லாம் அச்சியந்திர சாலையிற்
பதிப்பிக்கப்பட்டது.

1915.

இதன் விலை  ரிஜிஸ்டர்ட் காபிரைட்  அணா 12.

# புதிதாய் வெளிவந்து யிருக்கும்

## புஸ்தக விளம்பரம்.

---

| | | | |
|---|---|---|---|
| பஅுந்தநாறல் ஹறுதா தர்சுமா யாஸையித்தீ மாலை கிரையம். | 0 | 6 | 0 |
| பஅுந்தநாறல் ஹறுதா தர்சுமா முன்னோர்கள் பாடிய 12-முனஜாத்துகளும் முகியித்தீன் மாலையிது 3-னும் சேர்ந்தது, ... ... விலை | 0 | 12 | 0 |
| அபூநவாஸ் விகட களஞ்சியம். ... ” | 0 | 12 | 0 |
| இஸ்லாமிய்யா மார்க்கச்சட்டம் ஷாபிஈ ” | 0 | 8 | 0 |
| ஷை இஸ்லாமிய்யா மார்க்கச்சட்டம் ஹனபி | 0 | 8 | 0 |
| ஜெர்மனி யுத்த சரித்திரம் புஸ்தகம் ... ” | 0 | 8 | 0 |
| சுபுஹான மௌலுது தர்சுமா ... ” | 0 | 6 | 0 |

### தனிதனியே நபிமார்களுடைய கிஸ்ஸாக்கள்.

| | | | |
|---|---|---|---|
| நபி ஆதம் அலைஹிஸ்ஸலாம் கிஸ்ஸா .... | 0 | 8 | 0 |
| நபி யூசுபு அலைஹிஸ்ஸலாம்கிஸ்ஸாமுழுமையும் | 0 | 12 | 0 |
| நபி ஐயூபு அலைஹிஸ்ஸலாம் கிஸ்ஸா ... | 0 | 4 | 0 |
| நபி யிபுருஹீம் அலைஹிஸ்ஸலாம் கிஸ்ஸா .... | 0 | 6 | 0 |
| நபி தாவூது அலைஹிஸ்ஸலாம் கிஸ்ஸா ... | 0 | 4 | 0 |
| நபி கூது அலைஹிஸ்ஸலாம் கிஸ்ஸா .... | 0 | 4 | 0 |
| நபி சுலைமான் அலைஹிஸ்ஸலாம் கிஸ்ஸா ... | 0 | 8 | 0 |
| நபி ஈசா அலைஹிஸ்ஸலாம் கிஸ்ஸா ... | 0 | 8 | 0 |
| நபி யித்ரீஸ் அலைஹிஸ்ஸலாம் கிஸ்ஸா ... | 0 | 1 | 0 |
| நபி இசுமாயீல் அலைஹிஸ்ஸலாம் கிஸ்ஸா. ... | 0 | 4 | 0 |
| நபி முசா அலைஹிஸ்ஸலாம் கிஸ்ஸா ... | 1 | 0 | 0 |

மானேஜர்:—

ஓ. எம். முஸ்தபா லெப்பை, இஸ்லாமிய்யா

“பிரசங்கநேசன் ஆபீஸ்”

நெ. 50, சூரப்பமுதலி தெருவு,

திருவல்லிக்கேணி மதருஸ்,

## இந்த ணைபத்துனுடைய காசியத்து.

அல்ஹம்து லில்லாஹி றப்பில் ஆலமீன் வல்ஆக்கிபத்து லில் முத்தகீன் வஸ்ஸலாத்து வஸ்ஸலாமு அலா றஸூலிஹி ஸையிதினா முஹம்மதின் வஆலிஹி வஸஹ்பிஹி அஜ்மயீன்.

• ஹம்து ஸல்வாத்து ஸலாமுக்குப்பின்னால் எமது இருவான்களாகிய சகல முஸ்லிமான ஜனங்களுக்குந் தெரிவிப்பதியாதெனில் இதிலிருக்கின்ற யாஸையிதீமாலை யினுடைய ஸவாபையும், பிரயோஜனத்தையும், நிறைவேற்றத்தையும் இவ்வளவென்று ஒருவராலு மெழுதி முடியாது ஆயினும் சுருக்கமாக வெழுதுகிறேன்.

யாராகிலுமொருவன் இந்த யாஸையிதீ மாலையை நித்தியமும் நேமமாய்ப் படித்து வருவானே யானால் அவனிலுண்டான தங்கடம், மிடிமை, ஆபத்து முஸீபத்து முதலிய கஷ்டங்கள் டங்கலும் யாதொரு தடையின்றித் தட்டுண்டு போவதுடனே பின்னும் அவன் றன்னுடைய ஆயுளுக்குள் எவ்விதமான யாதொரு கஷ்டங்களும் வந்தணுகாதென்பது நிச்சயமேயாம்.

இன்னும் யாராகிலு மொருவன் தனக்கு நேரிட்டிருக்கும் அவசியமான ஹாஜத்துக்காக இரவு காலத்தில் பிறஜாமத்தில் நித்திரையை விட்டு மெழுந்து உலூச் செய்து தனித்த விடத்தில் கிபுலாவை முன்னோக்கி உட்கார்ந்து தன்னுடைய நினைவில் நபீநாயக மவர்களை ஹாலிறுப்படுத்தி அவர்களிடத்திற் தன்னுடைய ஹாஜத்துகளை முறையிட்டவனாக இந்த யாஸைதீ மாலையைத்தொடர் பிடியாக மூன்று தடவை படித்து முடித்து நபீநாகம் ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லமவர்களைக் கொண்டு சிபாரிசு செய்து அல்லாஹுத்தஆலாவிடத்திற் றன்னுடைய ஆஜத்தைக் குறித்து துஆக் கேட்பானேயானால் அந்த அல்லாகுத்தஆலா அந்தவுடனே நிறைவேற்றிக் கொடுப்பான் இன்ஷா அல்லாகுத்தஆலா

இன்னும் இந்த யாஸையிதீ மாலையை மிகுதமாய்ப் படித்து வருபவர்களுக்கு அவர்களுடைய கல்பில் பாவமென்னும் இருள்களெல்லாம் விலகித் தீனென்னும் ஒளிவுண்டாகியவர்களுக்கு ஈமான் பலப்படுத்துவதோடு அல்லாகுத்தஆலா அவர்களுக்குத் துன்யாவிலும், ஆகிறத்திலும் சீதவித்தனத்தைக் கொடுப்பானாகவும் ஆமீன்.

பிஸ்மில்லா ஹிர்றஹ்மா னிர்றஹீம்.

இஃது

# பர்ஸைலியிதீ மாலை

—:(*):—

## காப்பு

மவ்லாய ஸல்லிவஸல் லிம்தாயி மன் அபதா
அலா ஹபீபிக்கைறில் கல்கிக் குல்லிஹிமி
வல்ஆலி வஸ்ஸஹ்றி பிவத்துப்பாயி பில்இஹ்ஸானி
மாதாம வஜ்ஹுல்லில் மஹ்பூபி பில்க்கறமி

யாநபியே யாநபியே யெங்கள் முஹம்மதுவே
யாநபியே யாநபியே யேகனி றசூல் நபியே

பர்ஸையிதீ யாறசூ லல்லாஹி குதுபியதீ
மாலீ ஸிவாக்கவலா அல்வீ யிலா அஹதீ

நாயகமானவரே நல்ல இறசூல் நபியே
தாயகமா யென்கையைத் தயவாய்ப் பிடித்தருள்வீர்
தாங்களன்றி யெனக்குதவித் தயவுசெய்ய யாருமில்லை
பாங்காக யானெதுங்கப் பண்புடையா ராருமில்லை.

பஅன்த்த நூறுல் ஹுதா பீக்குல்லிக் காயினத்தின்
வஅன்த்த ஸிர்றுன்னதா யாகைற முஃத்தபதீ

நீங்களோ நேர்வழிக்கு நிரப்பமுள்ள நல்லொளிவாம்
ஓங்குங் கொடையின் ஸிர்றை யுகப்பான நன்னபியே
ஊன்றுதலாய்ப் பிடிப்பதற்கு முவந்த நல மானவரே
தூண்டா மணி விளக்காய்த் துலங்குகின்ற யாநபியே

வஅன்த்த ஹக்கன்கியா துல்கல்கி அஜ்மஇஹிம்
வஅன்த்த ஹாதில்வறு லில்லாஹி திஸ்ஸததீ

ஹக்காய்ப் படைப்புகளைக் காப்பாற்றும் ரட்சகரே
மக்காதனிற் பிறந்த மதனியே யாநபியே
நேர்நடத்தும் றப்பளவில் நிலத்திலுள்ள ஜின்மனுவைச்
சீரான மோட்சமதிற் றெளிவர்க்கும் யாநபியே

யாமன்ய கூமுமகர் மல்ஹரம்தீ முன்பரிதா
லில்வாஹி தில்பற்திலப் நூல்துவ ல்ம்யலிதி.

மஹ்மூ தெனுந்தலத்தில் மன்னனுடன் றனித்து
வெகுமகிமை காட்சிபெற்ற வேதர்ம்பர் யாநபியே
தந்தைதாய் தாரம் சந்ததியு மில்லானைச்
சொந்தமுடன் காட்சிபெற்ற தூதாங்கர் யாநபியே.

யாமன்த்த பஜ்ஜறத்தில் அன்ஹாறு நாபி அத்தன்
மின் இஸ்ப ஐஹிபறவ் வல்ஜைஷ பில்மததி.

வர்காய் விரல்களிலே வர்வழைத்த நன்னதியாற்
றுசகங்க டார்த்துவைத்த தாஹா றசூல் நபியே
மறுமையிலே வருந்தாகம் வருத்த மெல்லா முங்களுட
கருணையால் மாற்றிவைப்பீர் ஹாமீமிறசூல் நபியே.

இன்னீ யிதாமஸ்ஸனீ லேமுன்யு றவ்விஉனீ
அக்கூஹு யாஸைபிதஸ் ஸாதர்த்தி யாஸனதீ.

திடுக்கமா யென்னை நோக்கித் தீண்டுகின்ற தங்கடங்க
ளிடுக்கந் தனிலுஞ் சொல்வே னென்ஸையிதீநபியே
ஸாதாத்துக ளானவர்க்குஸ் ஸையிதே யென் ஸனதீ
ஆதரவாய் வந்துதித்த அஹ்மதுவே யாநபியே.

குன்லீ ஷபீ அன் இலர் றஹ்மானி மின்ஸலபி
வம்னுன் அலையபிமா லாக்கான பீகலதீ.

எளியேரன்றன் செய்பிழையை யிறையோனுந்தான்பொறு
தெளிவான மன்றாட்டஞ் செய்வீர்கள் யாநபியே [க்க
நித்திய சுகம் பெறவே நேசமா யென் பேரில்
முத்திதந் தருள்வீர்கள் முஹம்மதுவே யாநபியே.

வன் னுறுப்பிஜனிர்ரிலா வீதாயி பன் அப்தா
வஸ்தூறுப்பி தவ்லிக்கத்தக் வீரீ மதல் அமதி.

மாரும லெப்பொழுது மகிழ்ச்சியா யென்னளவில்
நேர் பொருந்துங் கண்ணலே நீர் பாரும் யாநபியே
உங்கள் மகிமை கொண்டே யூழிநாட் செய்பிழையாற்
பங்கப் படுத்தாமற் பலன்றருவீர் யாநபியே.

வஃத்திபு அலையபி அபு வின்மின்க யஷ்மனுனீ
பஇன்னனீ அன்கயா மவ்லாய லம் அஹிதி.

உங்களில் நின்றமுள்ள உகப்பான பொறுக்குதல்தா
னெங்களைப் பொதிந்துக் கொள்ள விரங்குவீர் யாநபியே
கருத்தரே யும்மை யன்றிக் காண்கிலே னென்றனக்குப்
பெருத்த பிழை பொறுத்துப் பேணுவீர் யாநபியே.

இன்னீத்த வஸ்ஸல்த்து பில் முகுதாரி அஷ்றபிமன்
றக்கஸ் ஸமாவாத்திவிர் ரில்வாஹி தில் அஹதி.

தாகமாய் வான்கடந்து ஷறபான அறவுளவில்
வாஹிதா யிருக்கும் றப்பை வசனித்த யாநபியே
எனக்குதவியான நல்ல வின்பமுள்ள வஸீலாவே
மனக்கவலை தீர்க்கு மெங்கள் வள்ளலே யாநபியே.

றப்புல் ஜாமலிதஆ லல்லாஹு காலிகுஹு
பமிதுனு ஹுபிஜமீ இல்கல்கி லம் அஜிதி.

ஜமாலுள்ள றப்புவும்மைத் தன்னொளிவாற் றூண்மைத்தான்
கமால் முழுதும் பெற்றுவந்த காரணரே யாநபியே
உங்கள்போ லொருபடைப்பை யுடையோன்படைக்கவில்லை
யெங்கள்நபி யாகவந்த ஏற்றமுள்ள யாநபியே.

கைரில் கலாயிக்கி அஃ லல்முறுஸ லீனதுரு
துகுரில் அனுமிவஹா தீஹிம் இலர் றுஷதி.

முறுஸலீ னவர்க்கு முன்னை அஹமதுவே
நெறியளவில் வழிகாட்டும் நீதரே யாநபியே.

எல்லாப் படைப்புகட்கும் மேற்றமுள்ள தங்கரிப்பே
நல்ல வழிகாட்டும் நாயகரே யாநபியே.

பிஹில்த்த ஜஃத்துல அல் லல்லாஹு யக்பிறுலீ
ஹாதல்லதீ குவபீ லன்னிவ முஃத்த கதீ.

அல்லாகு யென்பிழையை அன்பாய்ப் பொறுப்பதற்கே
யல்லும் பகலுமுங்க ளாதரவே யாநபியே.

இப்படியே யென்னுடைய யிருதயத்தில் நல்லுறுதி
தப்பாமலென்றனுக்குத் தந்தருள்வீர் யாநபியே.

பமதுகு குலம் யஸல் தஃபீ மதாவுமுரீ
வகுப்புகு இன்த்தறப் யில் அறுஷி முஸ்த்தனதீ.

உயிருள்ள நாளளவு முங்கள் புகழ்மதுஹால்
கைர் பெருகத் தந்தருளும் காத்திம்ற சூல்நபியே.
அறுஷுடைய றப்பான அல்லாவின் றிருமுகத்தைப்
பிரியமுடன் கண்காட்சி பெற்றோரே யாநபியே.

அலேஹி அஸ்க்கா ஸலாத் தின்லம்ய ஸல்அபதா
மஅஸ் ஸலாமிபிலா ஹஸ்ரின் பிலா ஆததி.

மட்டு திட்ட மெண்ண மன்றி மன்னுன் ஸலா முடனே
இஷ்டஸல வாத்துமக்கே யிறைகிருபை யாநபியே
எக்காலு மாகபிந்த ஏற்றமுள்ள ஸலவாத்து
ஹக்காக வந்திறங்கும் ஹாதீற சூல்நபியே.

வல்ஆலி வஸ்ஸஹபி அஹ்லில்மஜ்திச் காத்திபத்தன்
பஹ்ரிஸ் ஸமாஹிவ அஹ்லில்ஜூதி வல்மததி.

கொடைமிகுந்த ஆல்களுக்குங் குதுபான கோமருக்கு
முடையோன் கிருபையுண்டா முதவிசெய்வீர் யாநபியே
எடுத்துப் படிப்பவர்க்கு மின்பமாய்க் கேட்பவர்க்குந்
தொடுத்தோ ரனைவருக்குந் துணைச் செய்வீர் யாநபியே.

தும்மஸ் ஸலாத்து அலா கைரில் பரிய்யத்திமன்
அத்தா இலேஹிபிபஃ யில்லாஹீ ஜிபுரீலு

நாயகன் மலக்கான நலமான ஜிபுரீலு
ஆயும் வஹீசெலுத்தும் அஹமதுவே யாநபியே.
ஹக்கன்ஸல வாத்துரித்தும் கைருணா யாநபியே.
முக்கியமா யுங்களுக்கு மொழிகிறோம் யாநபியே

பைலுஸ் ஸலாத்தி அலா கைரில் ஹூதாத்திஜறு
மாலம்லைல அல்பறுக்குமின் ஆபாக்கி னஜ்மாஇ.

வானின் றிசையில் நின்றும் வழங்குமின்க ளுள்ள மட்டும்
மானின் பிணைநபியே மகிமையுங்கட் கேநபியே
உற்றஸல வாத்தி னுகந்ததை வானதுவை
யற்ற மன்றி யுங்களுக்கே யருள்கிறோம் யாநபியே.

தனதாகக் கண்காட்டி தாத்தொளியைக் கண்டுவந்த
இனிதான நபிபேரில் இறையோன் சலவாத்துரைப்பாய்
சிறப்பான கஃபாவிற் றெளிவாக வந்துதித்த
நிறப்ப முள்ள முஹம்மதுவே நெறிநேச நேநபியே.

மலக்கான ஜிபுரீலு மகிமைநா வுரைத்த கவி [டாம்
துலக்கமாய்ப் படிப்பவர்க்குத் துய்யோன் றஹுமத் தண்
துய்யோன் முஹம்மதுவின் துலக்கும் றவுலா மதினின்
மெய்ய யெழுதப்பட்ட விளங்குங்கவி நற்பொருளே.

யாறப்பி ஸல்லி அலா மன்ஹல்ல பில்ஹறமி
தாஹர்ற சூலுல்லதீ கதுகஸ்ஸ் பில்கறமி.

யாஸையிதிமாலை முற்றிற்று.

பிசுமில்லா கிற்றகுமா னிற்றகீம்.

# இதுவும்-செய்கப்துல் காதிறு நயினர்லப்பை ஆலிம்புலவர்கள்செய்த, முனஜாத்து முதலிய செய்யுட்கள்.

——(:*:)——

## ஹக்குபேரில் முனஜாத்து.

இந்த முனஜாத்துச் செய்தகாரணம் யாதென்னில், ஹிஜுறத்து 1260-61 வரு. சென்னை மாநகரத்தில் மிகவும் விபரீதமாக நடந்த, வுபாக் குழப்பத்தி லனேகமுசிலீமான வுடப்பிரப்பார்கள், புலவர்களிடத்துற்று, இவ்வுபாவாகிய பலாய்நீங்கும் பொருட்டு அல்லாகுத் தஆலாவைப் புகழ்ந்திரப்பாகவோர், முனஜாத்துப் பாடித்தரவேண்டுமென்று கேட்டதற்காகச் செய்யப்பட்டது.

அறுசீர்க் கழிலடியாசிரிய விருத்தம்.

காவலாய் நிற்கும் வல்லோன் கத்தனைச் சீவனெல்லா
மாவலாய்ப் போற்றி வாழ்த்தி யதற்குண வளித்த கோமா
னவின லெளியோர் கேட்கும் நாட்டத்தின் படியே தந்து
தாவிலா றகுமத்தாலே தற்காக்கும் பொருளதாமே. 1.

வேறு.

அருவாபாலமடங்கலுக்குமரியபொருளாய்விளங்கி நிற்குந்
திருவாலமையாய் பேரொளியாய்த் திகழ்ந்து நாளுப்பரா
பரிக்குங்-கருவாய்க் கருவி னுண்மணியாய்க் காட்சியருளு
றகுமானே-வுருவாய்த் துலங்கு மன்னனே யுனது கிருபை
யருள்வீரே. 2.

நாடு நாட்டப் பயனதுபோ னனிசொளால மடங்கலையு
மோடுபெறவேபடைத்தெவைக்குமுன் னுமிரணமிகக் கொடு
வீடிலாது காத்தளிக்கும்வேதப்பொருளே றகுமானே [த்து
கூடுகின்றனடியார்கள் குறைகளைப்பாய் காதிறவே. 3.

உனது கிருபைக் கடலிடத்தி லுதித்த மணியாய்த்தோன்றிங்
டனது ஷேமப்பொருளாகுந் தாசிம்நபியார்பொருட்டாலே
கனதியிலாகிநாயகனே கதியின்பயன்யாதுமாபினுறை [மானே
மனதுகலங்கு மெளியோர்கண் மறுக்கந்தவிர்ப்பாய் றகு

புவியில்விளங்குநபிமார்கள் புகழும்பொருட்டாணமுன்னுள்
அவுலியாக்கள்குதுகதாக்களரியபெரியோர்பொருட்டா [ள
துவமேமுஹீத்தே தாயோனே துலங்கும்நாசிறுணவனே [னுங்
கவலைநீக்கி பலாய்களெல்லாங்காணுதகற்றாய் றகுமானே 5.

துன்ப நீங்கியறிவிவிங்குந் தூயவேத மொருநாலி
னின்ப முளதுபொருளாலேயினியவுன் றன்பொருட்டாலே
யன்புபுரியும் கபீபேயெம் ஆகத்துயிரேதையானே
வன்பு மாற்றி நல்வரிசைவண்ணம யருள்வாய் றகுமானே.()

உள்ளங் கலங்கித் தத்தளித்தே யுணர்வுமயங்கினின்னடியார்
தெள்ளங் கண்ணுள் மிகவோட வெருளுந்துயரமணுகாமற்
கொள்ளுங்கிருபை மௌலானு குதாவே வதூதேகப்பாறே
கள்ளநோய்தங்க டங்கடங்கள் காப்பாய் றகுமானே. 7.

வேதம் நிறைந்தகுர்றத்தொடும் வியங்கும் ஆயத்த தனுலே
யோதும்பொருட்டால்மூமின்களுள்ளம்பொருட்டாலானை
யினுற் போதம் பெருகுமுன்னுடைய புகழுஞ் சிறப்பின்
ஆக்கினையாற் காதும்பலாய்க ளணுகாமற் காப்பாய்
காப்பாய் றகுமானே. 8.

வல்லன்மகுமூ தெனுநயினார் வழியிலொழுகி யுன்னுடைய
வில்லுநமார்க்கந் தனையெடுத்து விளக்குந்தீனோராகையினாற்
றெள்ளு மறிவே மெய்ப்பொருளே தெளிவேயெங்கள் கண்
மணியேயெள்ளுமாபத்த னுகாமலின்பம்புரிவய்றகுமானே.

அடியார்செய்யும் பிழைகளெல்லாம் ஆளுமிறை நீ
பொறுப்பதல்லாற்
படியோர்வேறே யில்லையன்னு பயனுநயனுமருள்வோனே

கெடியேர் னிம்மை மறுமையிலு நீதியுடையோ னுகையினுற்
கொடியபலாய்களனுகாமற் குறைகடிர்ப்பாய் றகுமானே.

முன்னுநீயே யுடையபொருண் முழுதுநீயேயாண்டருளும்
பின்னு நீயேயிரப்பை யெல்லாம்பேனு நீயே யன்றியில்லே
யென்னு நீயே மேன்மேலு மென்று நீயேகப்பாறே
யுன்னுமடியார்க் கொருதீங்கும்வாராதருள்வாய் றகுமானே

அக்குபேரில் முனாஜாத்து முற்றிற்று.

இம்முனாஜாத்துப் பாடித்தீர்ந்தவுடனே, உபாக்குழப்ப மாகிய, பலாய் நீங்கிவிட்டன அதனால்யாவரும் சந்தோஷ மாகினார்கள்.

பிசுமில்லா கிற்றகுமா நிற்றகீம்

இஃது

காயற்பட்டணம்.

திருப்புகழ்பாடிய மகாவித்துவான் அருள்வாக்கி

காசீம் புலவரவர்கள்

* பூவாற்றி லிருந்து

நபிநாயகம்பேரிற் பாடிய

# இன்னிசை.

முன்னவனே அகத்தியத்தாய் முத்தியுக தத்தாகிப்
பின்னவனே வதிய்யாய்ப்பேரான மெய்ப்பொருளே
தன்னவனே தயாபரனே சராசரமாய் நின்றவனே
மன்னவனே பின்னிசைக்க வல்லவனீ காப்பாமே.

நூல்.

ஆதியொளிவாகியகி ரண்டபகிரண்டமொரு
சோதியொளி வாகிநின்ற தூண்டா மணிவிளக்கே
போதியுணர்ஞானகலே யோலமிடும் செய்யிதப்துல்
காதிறெநல் ஹஷீமகுல காசிமுஸ்த பாநபியே. 1

மெய்யெடுத்தநாண்முதலாய்மெய்யறியேன்வெட்டவெறும்
பொய்யெடுத்த பாவியையும் பொன்னடிக் கொள்வீரே
மையெடுத்த சோலைமழை மாரிவெள்ளந் தூவதுஆக்
கையெடுத்து வேண்டுமக்கா காசிமுஸ்த பாநபியே. 2.

பொய்மாற வென்னொருகாற் பொங்குபசும் புண்ணழற்ற
மைமாற வேயருட்கண் வைத்திடு ளெந்நாளோ
பெய்மாரி நோக்கியிந்தப் பேருலகம் வேறுமொரு
கைமாறு செய்வதுண்டோ காசிமுஸ்த பாநபியே. 3.

பூக்குந் தடநிழலும் பூவாது பூவின்முகில
ஆக்குங் குடையமன்பி யாக்களுக்கு முண்டாமோ
போக்குங் கொடுந்துமரம் பொறுக்கும் பொறையபயங்
காக்குங்கரு ணைசமக்கா காசிமுஸத பாநபியே. 4.

ஒருகால முமமனுகா வொருகால் பிணியகல
வருகால மெக்காலம் வருகாத லறியனே
குருகாலுஞ் செங்கையொரு கோதைதனை யூட்டிவைத்த
திருகால முண்டவெங்கள் காசிமுஸ்த பாநபியே. 5.

சங்கை படைத்தவொரு தாய்கண்மகனு ருணிழந்த
வங்கை படைத்ததிற மார்க்குஞ்செய வுண்டாமோ
கொங்கை படைத்தவஞ்சிக் கொப்பேருங் தாருவாக்
கங்கை படைத்தவெங்கள் காசிமுஸ்த பாநபியே. 6.

கோலூற்ற மன்னரிட்ட கோட்டைபதி னைன்குமென்றூர்
வேலூற்ற மானசமர் வென்று தங்கைக் கொண்டோரே
பாலூற்று நீலாற்றுப் பள்ளம் வெள்ளம் வெள்ளியனைக்
காலூற்று மக்கநயர் காசிமுஸ்த பாநபியே. 7.

வென்றேறும் வேலரசர் வீரமுடி யாசனத்திற்
சென்றேறுங் கஞ்சமலர்ச் சேவடிதந் தாளுமையா
நன்றேறு முத்திதரு ஞானக்கொழுந் தேதுளக்கி
கன்றேதண் சோலைமக்கா காசிமுஸ்த பாநபியே. 8.

ஐதூக்குங் கையினகன் ருற்வேட்ட மாடுமழை
மைதூக்கும் போதரிக்கண் மாதருக்கா ளாவேனே

பைதூக்கும் பாந்தளுணப் பாழ்நரகம் புக்காமற்
கைதூக்கிக் கொள்ளுமக்கா காசிமுஸ்த பாநபியே. 9.

வேட்டுங் கனவிலொரு வேளைவெளி யாகவந்து
நீட்டும் பரகதியு நல்கிடுநா ளெந்நாளோ
தீட்டும்புகழாபரணத்தின் தின்முகம்மதெனக்
காட்டுங்கதிகோட்டுமக்கா காசிமுஸ்தபாநபியே. 10.

விண்பார்க்குஞ் சாதகம்போல் வேண்டியுமை மீண்டுமிசைப்
பண்பார்க்குஞ்சேணசுணப் பட்சியெனவுந்தேடி
யெண்பார்க்கு மேழைதனக் கேயிரங்கி யெவ்வளவும்
கண்பார்த் தருளுமக்கா காசிமுஸ்தபாநபியே. 11.

பூரியநோ யென்னொருகாற் புண்ணிருந்து நொந்தழற்ற
வீரியமே பொன்றியுள்ளம் விள்ளாதயர்வேனோ
யேரியபேர் கொண்டவுங்கள் பேருடையோனுக்குவரக்
காரியமேன் ஆஷிம் குலக்காசி முஸ்தபாநபியே. 12.

முள்ளாறுங் கல்லாறு மூழ்கிப் பரந்தவெள்ளத்
துள்ளாறு மான்காட்டவுந்துகரை கண்டோரே
புள்ளாறு காவுழப்பப்பூஞ்சோலை பூவிரிந்து
கள்ளாறுபாயுமக்கா காசிமுஸ்தபாநபியே. 13.

பால்சாய்க்கும் வெள்ளைவட்டப் பாரரசர் வீரமுரண்
வேல்சாய்க்கும் வெற்றிகொண்ட வேதாந்தத்துப்பொருளே
சேல்சாய்க்கு முட்புறக்காய் செவ்வாழைச் குலைவரம்பிற்
கால்சாய்க்கு மக்காநகர் காசிமுஸ்தபாநபியே. 14.

பாணியாத்தண்ணளிக்கண் பார்த்தெவ் வுயிர்க்கும்புக
லாணியாய்த் தன்னுயிர்போ லாளுங் கருணேசே
யேணியேய்க் கடந்துறுவிலேகனைக்கண்டெட்டுசொர்க்கங்
காணியாய்க்கொண்ட வெங்கள் காசிமுஸ்தபா நபியே. ()

கத்தூரி யகுளத்தி னூரமின்றி நாட்டிய்வம்
புத்தூரி நின்ற வெள்ளம் பொங்கிவரத்தானழைத்தீர்
முத்தூரியகுடையின் மூவுலகுங்காக்குமெய்யிற்
கத்தூரி வாடைகமழ் காசிமுஸ்தபா நபியே. 16.

வேலேறு முட்குடைவேல் வெய்யசிலை வேடனுக்காய்
மாலேறு நின்றுசலாம் வந்துசொல விண்ணோரே
கோலேல நிருலமிதேன் குண்டேர்ந்து வந்துகொடிக்
காலேறு மக்கநகர் காசிமுஸ்தபா நபியே. 17.

மட்டேரைம் பாவளக மாணிக்கப்பொற் கொப்பையொட்
தொட்டேர் சருங்கயற்கட் டோகை ளாம்வனை [டித்
தெவட்டேர் ரவிங்களப்போர் வென்றதற்பின் மூன்றுபகல்
கட்டேரமாங் தவருங் காசிமுஸ்தபா நபியே 18.

சேந்தமட்டும் வாய்ந்தபதந் தெப்பந்தொட்டேன் பாவிவெ
நீந்தமட்டும் போந்துசற்றே நின்றுகரையேற்றுமையா [ள்ள
சாந்தமட்டுங் கஸ்தூரிச் சரவமண மேவுமெண்டி
காந்தமட்டும் வீசும்புய காசிமுஸ்த பாநபியே 19.

வெற்பூரு மற்புயமும் பொன்னடியுங் காணேனே
பொற்பூர் முகாம்புயமும் பொன்னடியுங் காணேனே
அற்பூரு மின்சொன்மறை யாரமிர்தச் செவ்வாயிற்
கற்பூர வாடைகமழ் காசிமுஸ்த பாநபியே. 20.

போரூருஞ் செவ்வேற்கண் பொருதுமட வார்நிதம்பத்
தேரூருங் கேட்டாருந் தேடி மெலிவேனே
நீரூரும் பாரூரு நின்றாறுஞ் சீருடைய
காரூருஞ் செங்கையெங்கள் காசிமுஸ்த பாநபியே. 21.

ஊசிமே னுட்கனேந்தாங் குளதாயி ஷாமனையிற்
றூசிமே தூம்மொளிவாற் றுன்கவர மின்றாரே
வீசிமேற் கொழுந்தோடி விண்பூத் தலர்ந்தபுகழ்
காசிமே ஹிஷீம்குலக் காசிமுஸ்த பாநபியே. 22.

விண்ணின்மணி யேபொருளே வெண்மணியே ரத்தினமே
எண்ணின்மணி யேகுருவே யெவ்வுயிர்க்குந் தாயகமே
மண்ணின்மணி யேதருவே வாய்ந்தவுல கேழும்புகழ்
கண்ணின்மணி யேநிதியே காசிமுஸ்த பாநபியே 23.

கோடுபடுஞ் செம்பவளக் கொம்பனார் கண்வலைப்பட்
டுடுபடும் பாவியையீடேற்றுவது மெந்நாளோ
பீடுபடுந் தேறற் பெருக்கா றுவட்டுஞ்செந்நெற்
காடுபடு மக்கநகர் காசிமுஸ்த பாநபியே 24.

பூவார ணைமுகத்தே புக்கியிர்ந் தானுமுயிர்
தாவாரண் முகத்திற் சஞ்சரிக்கக் கூடாதே
பாவார ணைமுனைக்கும் ணபம்போனகர் கற்பகப்பூங்
காவா ரணைமுனைக்கும் காசிமுஸ்த பாநபியே. 25.

மாசபடா மிட்டவழி மாய்வலைப் பட்டுழன்று
பூகபடா மிட்டதனைப் பூவையர்க்கா ளாவேனோ
வேகபடா மிட்டழுக வேழமன்னர் மாளாவெட்டிக்
காகபடா துட்டணவவேற் காசிமுஸ்த பாநபியே 26.

பாம்போதி யன்றுமது பாதாம் புயம்பணிந்து
வீம்போதி வந்துசலாம் விண்டுசால நின்றாரே
பூம்போதி லஞ்சிறைப்பூம் புள்ளியுடைப் புள்ளினங்கள்
காம்போதி பாடுமக்கா காசிமுஸ்த பாநபியே. 27.

சேல்பிடித்த பண்ணேர்ந்து தெரித்திரநோ யுந்தீர்ந்து
மால்பிடித்த சஞ்சலமு மற்று மொழியேனோ
பால்பிடித்த சிந்தை பராக்கோ பரமடையக்
கால்பிடித்தேன் கண்ணில்வைத்தேன் காசிமுஸ்த பாநபி
[யே. 28.

நீயிரங் கரவொளியாய் நித்திலமாய் மாமயிலாய்
மாயிருஞா லத்திற்றின் வந்தநபி நீரலவோ
பாயிரநா மத்தோங்கும் பரமனைத் தென்றொழிய
ஆயிரநா மத்துடையீர் ஆலநபி யுல்லாவே. 29.

நீலவட்ட வானேந்தி நிலவுவட்ட மொன்றுவரத்
தாலவட்ட மீதில்ரண்டு சந்திரவட்ட மாக்கிவிட்டீர்
காலவட்ட மோங்குமுச்சிக் கதிரோற்குத் தான்கதலி
ஆலவட்டம் வீசுமக்கத் தாலநபி யுல்லாவே. 30.

துக்கரண பாதகங்க டேண்டுகலி திண்டாமற்
சக்கரவா ளத்தாண்ட சாபித்தெனை யாண்டுகொள்வீர்
செக்கரள கேசசெல்வ சித்திமுத்தி நலகிழ்வெட்
டக்கரந்தந் தாளுமக்கத் தாலநபி யுல்லாவே. 31.

போற்றுவரா ராத்மாவைப் பொறுப்பவரார்செய்தகுற்றந்
தேற்றுவாரார் மனப்பீடை தெரித்திரநோய் பாவமற
மாற்றுவரார் வல்லோன்முன் மன்றாடிச் சொர்க்கபதி
ஆற்றுவரா ருமையல்லால் ஆலநபி யுல்லாவே 32.

பாதவநந் தாவனத்துப் பாரிசல்மான் பாரிசுக்காய்ச்
சிதவனந் தான்சிதறச் சிமுதம்பெய் வித்தோரே
மாதவனந் தந்தகலை பாவைவலங் கொண்டுதிங்கள்
ஆதவனந் தோடுமக்கத் தாலநபி யுல்லாவே. 33

கூனிறால் பாய்ந்துவெள்ளிக் குண்டமுக டேருவித்
தேனிறால் கிறிவழி தேனு றுவட்டொழுகிக்
கானிரு றுறவளருங் கன்னியிள வாழைநிழல்
ஆனிரு றஞ்சுமக்கத் தாலநபி யுல்லாவே. 34.

கூம்பூடு பாய்விரித்துக் கூன்பிறைய வங்கவந்நீர்
தாம்பூடு பாய்ந்துலவத் தான் பொருப்பிற் றந்தோரே
வீம்பூடு போனவுயிர் மீட்டமிர்த சஞ்சீவி
யாம்பூடு போன்றமக்கத் தாலநபி யுல்லாவே. 35.

மூசா பைத்தில்மரு மூறிற்சொற்ற சொற்சேரக்
கோசால மாய்நிறுத்திக் கொண்டிறைமுன் சென்றோரே
வாசாமகோசரமாய் வந்தகுறு ஆண்வழிதீன்
ஆசார மாய்நடந்தும் ஆலநபி யுல்லாவே. 36.

பாசனலனேதும் படைத்திலே னுடையபவ
மோசமா கும்படிக்கே மோட்சந்தா வேண்டுமையா
மாசனமா ரும்புகழ வல்லோ னறுஷினிற்சிங்
காசனமே லேறுமக்கத் தாலநபி யுல்லாவே. 37.

தாறலையில் வீசியபூந் தண்டலையி னூடுடும்பு
வேறலையி லாமலுவை வேண்டிவச னித்ததனாற்
பேறலையி லாததொரு பேரின்பக் கலிமாவை
ஆறலையில் வேடற்கரு ளாலநபி யுல்லாவே.

நபிநாயகத்தின் பேரில் இன்னிசை முற்றிற்று.

பிஸ்மில்லா ஹிற்றகுமா னிற்றகீம்.

# கிலுறுநபிபேரில் முனாஜாத்து.

---

அறபு சந்தம்.

பிசுமில்லா இற்றகுமானி ற்றகீமென்றோதி
அசையாப் புகழல்ஹம்துடன் அதிகசலாத்தோதி
குசியாக அபலப்பாசு கிலுறுநபியைப்போற்றி
பிசகாப் புகழுரைக்க பேரிம்பமே காப்பு. 1.

ஸூறுக் கடலான நபி திருப்பாதம் போற்றி
அபூபக்க ருமறுது மானலிபாதம் வாழ்த்தி
அபூ முகம்மதப்துல் காதிறடிமலரை யேத்தி
கபூறுற்றகீனமான றப்பிலா மீனே காப்பு. 2.

முன்னூற்றிப் பதின்மூன்று முறுசல்நபி பாதம்
கன்னு னருள்பெற்றுவந்த ஹசன்ஹுசைனின்பாதம்
ஜன்னத் தருள்பெற் றுயர்ந்த சார்இமாங்கள் பாதம்
என்னு ளுமென்மனதி லேந்திப் புகழ்வேனே. 3.

மன்னர் மலிக்காதவத்தின் மகிழ்ச்சியுடன் பிறந்து
மின்னொளிபோ லிவ்வுலகின் மேன்மையுடன் சிறந்து
மன்னு னருட்படியே அந்த மாவுல்ஹயாத் தருந்தி
அன்னக் குடைகொடுக்கும் அபலப்பாசு கிலுறுநபியே 4.

கனமுடனே கைருக காடுங்கடல் தரித்து
எனமுடனே யாவரையு மெதிர்நோக் கிக்குறித்து
மனதிரங்கிக் கிருபைசெய்து வழிபார்த்தாதரித்து
அனைவரையுங் காக்குமப லப்பாசு கிலுறுநபியே. 5.

நீதி நெறியாக விந்த நீணிலம் தனிலே
சாதி மயசச்சுடராய் ஸமது நிலைதனிலே
சோதிவிளக் காகவந்த துய்யவொளி தனிலே
ஆதியருள் பெற்றஅமபலப்பாசு கிலுறுநபியே. 6.

கொத்து வயிரம் போன்ற திருக்கோட்டை யதுக்குள்ளே
எத்திடவே ஞானமது இருபாதத் தினுள்ளே
கத்த னொளிகாண வென்றுங் காதல்மனதி னுள்ளே
அத்த விதம்புரியும் அபல் அப்பாசு கிலுறுநபியே. 7.

கோலங் குறிப்பில்லாது கோமானருள் விளங்க
மூலப் பொருளாராய்ந்து மூவ்வுலகந் துலங்க
நாளுங் கழிந்தோடாமல் நவநீதமாய் முளங்க
ஆலஞ் சிறந்த அபல் அப்பாசு கிலுறுநபியே. 8.

ஹையுன் ஆலிமுன் முரீதுன் காதிற் சமிவுடனே
துய்யகலீற் முதகல்லிமுன் துலங்க சிபாத்துடனே
ஐயறிவோ டாளுமந்த அமானப் பொருளுடனே
அய்யம் நீங்க அருளபல் அப்பாசு கிலுறுநபியே. 9.

முச்சுடராய் முழுமதியாய் மூவ்வுலகம் பொருந்தி
பிற்சுடராய்ப் பேரொளிவாய்ப் பிறபலமாய்ச் சிறந்து
சச்சுடராய் ஸமதாயெங்கும் ஷம்சுதாத்தா சிறந்து
அச்சுடரா யருளம்பல் அப்பாசுகிலுறு நபியே. 10.

பூராய மாகவிந்தப் பூதலத்தில் லுதித்து
ஆராபாரத் துடனே ஆலமெங்கனு மதித்து
மாராய மீந்திடவே வந்துமென் முன்குதித்து
ஆராயு தாரும்பல் அப்பாசு கிலுறுநபியே. 11.

ஆதி திருவா யெழுந்த ஆநந்தியே போற்றி
ஓத மிகவேபணிந்தென் உண்மைப் பொருளேத்தி
நீதி மணிவாசலதில் நின்றிலங்கச் சாத்தி
ஆதியருள் தாரும்பல் அப்பாசு கிலுறுநபியே. 12.

வேத விளக்காக இந்த மேதினியைத் தாங்கிச்
சோதி மணிஷப்சு தாத்திற றாங்காம ற்றாங்கி
நீதி நிலையாக உலகெங்குமே நின்றோங்கி
ஆதி யருள்பெற்ற பல்அப்பாசு கிலுறுநபியே. 13.

மண்ணறைக் குள்நிலைமை செயு மவுன மணியைக் காண
கண்ணடி வட்டக் கருக்குழியின் மணந் தோண
ஒண்ணாக வீற்றிருக்கும் உட்பொருளைப் பூண
அண்ண லருள் தாரும்ப லப்பாசு கிலுறு நபியே. 14.

தூங்காமற் றாங்கிக் காணத் துணைச்செய்ய வேணும்
பாங்குடனே வந்தெனக்குப் பாக்யந் தரவேணும்
நீங்காமலாடும் பரி பூர்ணங்காண வேணும்
ஆங்காரமுள்ள அப்பாசு கிலுறு நபியே. 15.

தாரணி யடங்கலுக்குந் தளிரெழுந்த பூவே
கரரணங் கொண்டனை வரையுவகாக்குங் கற்பகாவே
பூரணமாய்ப் பூவுலகின் புகழ்பெருத்தகோவே
ஆரணந் தந்தருளு மபல்அப்பாசு கிலுறு நபியே. 16.

எப்போது மெளியேன் முகம்பார்த் திரங்குவீரே
செப்புமறு நான் கொன்றில் செய்தவ மருள்வீரே
இப்ப மிருலாமலிபென் றெழில்மோட்ச மருள்வீரே
அப்பொருளைச்சே ரபல்அப்பாசு கிலுறு நபியே. 17.

அஞ்சு மாறு மிகுசானும் ஆராய்ந்துளம் விளங்க
நெஞ்சில் வாழுமஞ்சிலொன்றை நீதியுடன் புழங்க
வஞ்சக மில்லாத பறுலஞ்சுதானும் வணங்க
அஞ்சு ரண்டருளுமபல் அப்பாசு கிலுறு நபியே. 18.

திரு மனமகிழ்ந்து துய்பத் திருவாக்குப் பெற்று
மருமலரும் வாசனையே மணதறையி லொத்து
குருவருளைப் பெற்றுயர்ந்து குன்னருளை யுற்று
அருமையுடன் வந்தபல் அப்பாசு கிலுறு நபியே. 19.

புகழ் பெரிதாய் வனத்திற் வாழும்புண்ணிய சிகாமணியே
சுகம் பெறவே வென்றனக்கு சொல்லுந் திருமணியே

முகமலர்ந்த முத்திமுகியித் தீனினை மணியே
அகமகிழ அருளபல் அப்பா சுகிலுறு நபியே. 20

யாது கொண்டு நானடிமை யெப்போதுந் தோண
வேதப் பொருளா னதையாண் வேண்டி மனம் பூண
நாதனருள் தங்கும்நல் முகியித்தீனைக் காண
ஆதரவு தாருமப லப்பாசு கிலுறு நபியே. 21

போதமுற வேயெனக்கு புண்யஞ் செய வாரும்
பந்தா தந்து வரம்பெற்றிட பற்றி முகம் பாரும்
நாத வட்டமான சுழி நானறியச் சேரும்
ஆதரவு தாருமப லப்பாசு கிலுறு நபியே. 22

கவனத்துடன் கலிமாவைக் கருதியுள்ளம் நாடி
மவுன மணிப் பெட்டகத்தை வருந்தி மிகத்தேடி
தவனங்கொண் டலையாமற் றுரு மனங் கூடி
அவனருளிற் சேரப லப்பாசு கிலுறு நபியே 23

வாக்கு மனமொத்துவர வேணுமிந்த வேளை
காக்க வேணு மனதிரங்கி காதி மிகக்கோளை
தாக்குதலா யின்னேரந் தாருமிரு தாளை
ஆக்கியருள் தாரப லப்பாசு கிலுறு நபியே. 24

சொற்பனத்தி லென்றனக்குச் சொல்லு வரவேணும்
விற்பமுடன் ஐம்பொருளை விளங்கத் தரவேணும்
உற்பனமா யுள்ளெழுத்தி லுறுதி தரவேணும்
அற்புதத்தை யருள லப்பாசு கிலுறு நபியே. 25

வான்பூ மலையனைத்தும் வருந்தி ஒருநொடிக்குள்
கானகங் கடல்கரையுங் கணித்து ஒரு அடிக்குள்
தானமென்ற தானமெல்லாந் தவறுதோர் குடைக்குள்
ஞான திஷ்ட்டி சேர்ந்தப லப்பாசு கிலுறு நபியே 26

வாக்கு வசனிக்க இந்த வல்ல அரும்பொருளை
நாக்கு மூக்கு மேனின்றுடும் நாதன்சுயப்பொருளை
தாக்கும் படிவந்தெனக்குத் தாருந்தவப்பொருளை
ஆக்கியருள் புரியப லப்பாசு கிலுறு நபியே. 27

அஞ்சு கூற்று யாடிமீளு மாதி திருவன்னம்
அஞ்சுவர்ன மாய்ச்சமைந்த அதிலடங்கா வன்னம்
அஞ்சாம லர்டும்பரி பூரணமே சொர்ணம்
அஞ்சிலாளரு ளபலப்பாசு கிலுறு நபியே. 28

கானகத்திற் காவல்செய்யுங் கற்பூர வாசர்
தான்பார்த்து வழிதிருப்பும் தரும விசுவாசர்
ஞானவழி திறந்து காட்டும் யாபேர்க்கும் நேசர்
ஆனந்த மேயருளபல் அப்பாசு கிலுறு நபியே. 29

காவலுடன் கருணைசெய்யுங் கண்மணியைத் தேடி
பாவமென்ற பிழைபொறுக்க பயகாம்பரை நாடி
தாவிமிகத்தவம்புரிந்த தமியன் முகங்கூடி
ஆவல்தீரும் வாருமபல் அப்பாசு கிலுறு நபியே. 30

வலியபுகழ் கொண்டுதாமும் வள்ளல் முகியித்தீனும்
தலீலாக இவ்வேளை தயவு செய்யத் தானும்
ஒலித்தனம் வந்தெய்திடவே உதவிசெய்ய வேணும்
அலிபுலாமீ மருளப லப்பாசு கிலுறு நபியே. 31

வள்ள லிறசூல்பொருட்டால் மன்ன னருளீந்து
தெள்ளுதலா யென்றனக்குத் திருவாக்குந் தந்து
கள்ள னிபுலீஸகற்றுங் காதிமிடம் வந்து
அள்ளுந்துவா க்கேளப லப்பாசு கிலுறு நபியே. 32

எங்கும் விளக்கொளிபோ லிலங்கிய சீமானே
நங்குடைகள் தந்தருளை நல கிடுமீமானே
பொங்கும் புகழ்மங்கை நகர் பிறந்த உத்மானே
சங்கை சொற்கஞ் சேரச்செய்யும் செய்யிதுகிலுறுநபியே.

சல்லல்லா நந்நபிக்கு சஹ்புமனைவர்க்கும்
நல்லாங்கர் முகியித்தீன் நாதர் கிலுற்நபிக்கும்
வல்லசலாம் சலவாத்தும் வரிசைநல்லோர் களுக்கும்
அல்லா றகுமத்துண்டாம் அனுதினமும் ஆமீன். 34

கிலுறு நபிபேரில் முனஜாத்து முற்றிற்று.

——:(*):——

பிஸ்மில்லா ஹிர்றகுமா நிர்றஹீம்.

# முகியித்தீனாண்டகையின் முனாஜாத்து.

—:(o):—

## அறுசீர்க்கழி நெடிலடி யாசிரிய விருத்தம்.

ஆரணம் நிரம்பிநின்ற ஆதிதன் பிசுமி கொண்டும்
பூரணமாகிநின்று புகழும் அல்ஹம்து கொண்டும்
காரண நபிமேற் கமால் ஸலவாத்துக் கொண்டும்
தாரணி படைத்தவாழுந் தனியவன் காப்புதாமே 1.

காத்தி முல்லவ்லியாவின் கைருன அகுலு மைத்தின்
கோத்திரத் தபூஸாலிகு கோமானின் புதல்வராகப்
பாதிமா தானீன்ற பாலகர் முகியித்தீன் மேல்
காத்திங்கள் புகழ்ச்சி செய்ய ஹக்கனே துணைசெய்வாயே.

மெய்யவ னருளுணர்ந்த மேன்மைபெற்று ஜோதி கொண்டு
துய்யநற் பொருள்விளக்கத் தூண்டுகோ லாக வந்து
கைதனைக்கொடுத்துக் கல்பின் கறுப்புக ளகற்றும் பீராய்
செய்தனு பகுறானுவே செய்யிதே முகியித்தீனே. 3.

ஆதிதன் னருளால்வந்த அகமது நபிதன்பேரர்
சோதியாய்ச் சுடர்மணியாய்த் தூண்டாநல் விளக்கொளி [வாய்
நீதியாய் நிராமயமாய் நிறைந்த பரிபூரணமாய்ச்
சாதியாய் மனியாய் வந்த ஷாகுயா முகியித்தீனே 4.

தத்துவக் காரணங்கள் தகுந்தகு மாக வெங்கும்
வற்றுத கடலதுபோல் வரிசையாய் வழுத்தி விக்கும்.
நற்றவத் திட்பொருந்தி நவநீத மாய்நின் றோங்கிச்
சுத்தபரி பூரணமே சுல்தான் யாமுகியித்தீனே 5.

காத்தருள் புரீவீரப்துல்காதிற்யா கவுதேயென்
ஷேத்திய நேத்திரத்தா லெடுத்தெனின் மனதுட்கொண்டு
தோத்திர மாகச்சொல்லித் தொடுத்துங்கள் பாதம்போற்ற
பார்த்துநற் கிருபைசெய்யும் பாதுஷா முகியித்தீனே 6.

கருவுக்குள் கருவாய் நின்ற காரண நபியின்பேரர்
குருவுக்குக் குருவாய் வந்த குதுபுல்லா வான கோவே
உருவுக்குள் ஒருவாய்வந்த உட்பொருள் தன்னைக்கொண்டு
மருவுக்குள் மருவாய் நின்ற மவுலானா முகியித்தீனே 7.

தினம் தினம் வருந்தியுங்கள் சேவடி தேடி நெஞ்சுள்
கனமுடன் கல்பிலூன்றிக் கருதியே காதல்கொண்டேன்
இனமுள்ள சருசொன்றி லிருந்தாளக் கிருபைக் கண்ணால்
மனமிக மகிழ்ந்து பாரு மகுதூம்யா முகியித்தீனே. 8.

தம்டமே யுங்கள் பாதந் தாபரம் வேறொன்றில்லை
நம்பி வந்தடியேன் மெத்த நாடியே தேடித்தேடி
வம்பனென் றெனைத்தள்ளாமல் வாகுடன்காத்து மென்பா
லன்பு வைத்தருள் புரிவீ ரவுலியா முகியித்தீனே 9.

நன்நிலையைத் தேடி மெத்த நாடினேன் பாதம் ரண்டும்
முன்னிலை நிறுத்திப்பார்க்க முஹப்பத்தாமாசைகொண்
என்னிலே யறியவுங்க ளெதிர்வந்து நிற்கக்காட்சிக் [டேன்
குன்னருள் புரிவீர்காஜா குதுபுயா முகியித்தீனே. 10.

தவாபுகள் தேடிப்பாவித் தரணியிற் றங்கிமுங்கி
ஆவாவெனும் வலைக்குள்சிக்கிக் கருத்து வேறாகிடாமல்
தவாவதுபோலே யுங்கடாமரைப்பதம் புகுந்தேன்
தவாபருள் சேருமையா தருவேசு முகியித்தீனே. 11.

அகப்பொருள் நாடிகல்பு ஆனந்தக் கடலில் மூழ்கி
தகுமதா யுங்கள்பாதஞ்சாடினேன் சதாகாலமும்
முகம்மது நாமங்கல்பில் முகப்பத்து கொண்டே தேடிப்
பகுமருள் தாருமையா பக்கீருயா முகியித்தீனே 12.

குல்லு செய்யடங்க அக்குங் குதுபாக வந்தகோவை
நல்லவர்பொல்லாதோர்க்கும் நவநீத மான கவுதை
சொல்ல வொண்ணாத சொல்லை சுகூதுசெய் தேத்துஞ்செ
வல்லாச மாகவந்த கரீபுயா முகியித்தீனே [யகாய்

நம்பினே னுங்கள் பாதம் நாடினேன் புகழைத்தேடி
இன்பமாயெளியோர்க்கெல்லா மிரங்கி ஈடேத்துங்கோவே
தம்பமாய்ப் பிழையைமாற்றித் தந்தருள் புரிந்து நோக்கி
வெம்பியே அழுந்திடாமல் வெளிதரு முகியித்தீனே. 14.

தஞ்சமே யுங்கள்பாதம் சரணமே கதியேயல்லாமல்
வஞ்சகஞ் சூழ்ந்திடாமல் மற்றொரு வினையண்டாமல்
செஞ்சியே அழுதுநின்றேன் கிலேசத்தை நீங்கள் தீர்த்து
அஞ்செலன் றென்னையாளும் ஆரிபு முகியித்தீனே. 15.

கார்கடல் புவியும்வானுங் கடன்மலை யனைத்துஞ் சேரப்
பூர்பத்தின் சுவர்க்கமெல்லாம் புகழுடனு தித்தகோவே
நேர்பெறக் கரையைமாற்றி நேசமாய்ப் போற்றி நீங்கள்
தார்புகழுவந்துவாழும் தஸ்தகீர் முகியித்தீனே. 16

ஆதிதன் னிடத்திற்சென்று அருளவர் புரிந்து நோக்கி
சோதிதன் னருளால்வந்த தூயவர் போனரே
நீதி யடியான் றன்னை நிச்சயமாகக் காத்து
ஆதிதன் மதிபோல்வந்த ஆண்டகை முகியித்தீனே. 17.

அல்லலும் துயருந்துன்பம் மலக்கொன்று மணுகிடாமல்
வல்லவனிடத்திற் சென்றுவருந்தியே காத்து நீங்கள்
எல்லவர் தங்களுக்கு மிரங்கி யீடேத்துங் கோவே
நல்லவ ருடனேகாரும் நாயக முகியித்தீனே. 18.

தினந்தினம் வருந்திநொந்தேன் றேடினே னுங்கள்பாதம்
கனகமே அழைத்திட்டாமல் காத்தொன்றுமணுகிடாமல்
மனந்தடுமாறிடாமல் மற்றொரு வினையண்டாமல்
நினைத்தது முடிப்பீருங்கள் நேசஞ்சேர் முகியித்தீனே. 19.

முன்னருள் தங்குமெங்கள் முகம்மதுநபி தமக்கும்
முன்னிலைத் தோளமார்க்கு முதலவன் றருமத்துண்டாம்
அன்னைக்குந் தந்தையர்க்கும்அடியன்ஷெய்குதுமானுக்கும்
ஜன்னத்தி னருள்சொரிவாய் ஸமதாக ஆமீனாமீன். 20.

முனாஜாத்து முற்றிற்று.

பிஸ்மில்லா கிற்றகுமா னிற்றகீம்.

# ஷெய்குசிந்தாசேகுமதார் பதீவுத்தீன் சாகிபுபேரில் முனாஜாத்து.

—(:*:)—

இன்னிசை.

அல்லா அருள்காப்பு ஆதிபிசுமிகாப்பு
அல்ஹம்து லில்லாகி றப்பி லாலமீன் காப்பு
ஸல்லல்லா நந்நபிமேல் சலவாத்ததின் காப்பு
வல்லநாலி யார்களிரு மலர்ப்பாதங் காப்பாமே. 1.

வையம் புகழ்பெற்ற வரிசைநபி பாதமேத்தி
செய்யிது முகியித்தீன் ஒலிசீர்பாதமென்று வேற்றி
ஐய மகற்றுமெங்கள் அகமது பதியுத்தீன்மேற்
றுய்யபுகழின்னிசைக்குத் துணைச்செய்வாயென்கோவே 2.

அலிபுலாமீம் அவ்வலாகி அஹதுவாஹிதாகி
அலிபுலாமீங் கேதாலா யஞ்சுபஞ்சபூதமாகி
அலிபிருலாம் ஹேயதற் குளாகிங் குதுபாகி
அலிபுஹே மீம்தாலாய்வந்த அகமது பதீவுத்தீனே. 3.

பாதின் கடலாயுதித்து பயகாம்பர் ஜத்தில்வந்த
பாத்துஷா அமீறுஅலீயார்வை களிசைமுத்தாய்
பாத்திமுத்து தானீன்ற பாலகரே யென்றன்முகம்
பார்த்து அருள்புரியும் பாஹிம் பதீவுத்தீனே. 4.

தத்துவத் தவப்பொருளாய் சாதிமணி சற்குருவாய்க்
கத்தனருள் பெற்றுயர்ந்த ஹலபு நகரிற் பிறந்து
வெற்றி முடிதரித்து மேதினி மக்காப்பூரின்
முத்தொளி போலாகுகின்ற முறாவஷிதுபதிவுத்தீனே. 5.

தவாசைப் புவந்து கற்றவப் பொருளேயும் நா
ஹவாவை யகற்றியந்த கல்வத்தினில் இருந்து
சுவாசமடக்கி சுபுகானி தலத்திற்சென்று
ஐவா பருள்பெற்ற வெங்கள் ஷெய்கு பதிவுத்தீனே. 6.

ஜன்னத்தருள்பெற் றுயர்ந்த செய்யிதிற சூல்மொழிந்த
சுன்னத் துடன்பறுலும் சுஜூதுஞ் ஷுகூறுடனும்
வன்னத்துக் கடங்காத வகுத்தஞ்சு மேவணங்க
நின்னய்யத் தருள்பூட்டும் நேசபதீ யுத்தீனே. 7

ஹையுல் கையூமான கருவைய்றி யாமல்துன்யா
மையல்கொண்டனு தினமு மயங்கிமிக வாடுவனோ
ஐயம கற்றியெனக் காதர்வாய் வந்துதித்து
கைகொடுத் தருளுமையா காமில்பதீயுத்தீனே. 8

கல்வத்தி னிலிருந்து ஹக்கருளை மன்றுடி
வெல்வெற்றி பெற்றவெங்கள் வேந்த ரொலியுல்லாவே
நல்வெளியி லென்னைக்கமா கால முரீதுக்குமும்
செல்வப்பொருள் தந்தருளும் செய்யிது பதீயுத்தீனே. 9

தாயுமாய்த் தாரணியிற் றத்துவத் தனிப்பொருளாய்
மாயாமல் நின்றுளுத மந்த வல்ல பொருளைக்காண
தாயாகுந் தந்தையாகுந் தாபரமுந் தாங்களன்றி
காயிமா கரத்திற்கண்டேன் ஹக்குபதீ யுத்தீனே. 10

தன்புமிகச் செய்யுமிந்த தமியேனுக் கென்னளும்
துன்பம் வந்தணுகாமற் றாராக்கித் துய்யபொருள்.
அன்பத்தொன் றிலாக்கி யரும்பொருளைக் காணடியேன்
நம்பிவந் தடிபணிந்தேன் நாதாபதீயுத்தீனே. 11

றப்பில் ஆமீனனேன் ரகசியப்பொருள்காண
ஹுப்பு வைத்தருள் புரியுங் குதுபுயா கவுதனேவே
ஒப்புவமை யில்லாத வுண்மையுள்ள வோர்பொருளைச்
செப்பவந் தடிபணிந்தேன் செய்குபதி யுத்தீனே. 12

ஸாஹிது வழிதேடி சதாகால் முந்தித்து
வாஹிது வல்லபங்கள் வசனித்த நாயகமே
தாஹா நபியைக் கொண்டுந் தாகந் தவிர்ந்திடவே
வாகா யருள்புரியும் வள்ளல்பதீயுத்தீனே. 13

ஈனென்னுங் கண்ணடிக்குள் சிறந்த நூறிலன்வாறாய்
தானென்னு மருளைப் பெற்ற தாஹா நபியுல்லாவின்

றேனென்னும் நல்லமிர்தம்தெளிவே நீர்தந்தெனக்கு
றீனென்னும் நல்வழியைத் திருத்தும் பதியுத்தீனே. 14

ஷஹாதத் தெனுங்கலிமா சதாகால முந்துதித்து
அகார உகார மதை யறிந் துள்ளிற்றான் றெரிய
சஹாரத் துடன் தவபாதக்குவா அருள்பெறவே
சகாவத்துச் செய்யு மெங்கள் ஷாஹூபதீ யுத்தீனே. 15.

ஸாலிகு நற்குணமுள்ள சாகிபே சற்குருவே
தாலி பருளெனக்கு தந்தருளவேணு மையா
மாலிக்குல் முலுக்கானேன் மன்னருள்கா ணக்காட்டும்
ஆலிமே ஆபிதுவே அகுமதுபதீயுத் தீனே. 16.

லைபுள்ள துனியாவினி லெல்லா மாலாசை
பொய்புறங்கள் சூது புறத்தினி லுரையாமல்
கைபியத் தாகிடவே கைமுதற் றந்தெனக்கு
செய்யினுங் கிருபை இன்னே செய்யிதே பதீயுத்தீனே. 17.

தாசிர் நபியுல்லாதஞ் சங்கைமுகத்துக்காக
ஆசை கொண்டனுதினமு பாகத்துள் மறந்திடாமல்
நேசமிகக் கொண்டேன் நேர்மையுள்ள அஹதிஸ்மை
வாசமுடன் வந்தருளும் வள்ளல்பதீ யுத்தீனே. 18.

ழுல்மது மிகவுஞ்செய்த தோஷிப்ழை பொறுக்கச்
சொல்வதற் காருமில்லைத் துய்யபெருங் களன்றி
கல்பதின் கிருபை யுள்ளோர் காசினிக் கடியேன்தன்பால்
நல்மொழி யருளுமையா நன்மை பதீயுத்தீனே. 19.

ஐனெனுங் கண்ணாடிக்குள் ளஹதிய்யத்தரும்பொருளை
ஐனெனுங் கண்ணா லாகந் தெரிந்து மந்த
ஐனெனுங் கலிமா வறிய அடியேன்றனக்கு
ஐனெனும் ஒளிவதனை அழகாக்கும்பதீ யுத்தீனே. 20.

காயிபான சிற்றின் கசானாத் திறவு கோலாய்
சாஹிபென வந்துதித்த சாதாத்து சற்குருவே
தாயிலாப் பிள்ளைபோல தத்தளித்து வாடாமல்
[illegible]ர்யாக் கனியமுதங் காட்டும்பதீ யுத்தீனே. 21.

பருமா னுதித்து மிந்த பாருலகி லேபிறந்து
தருமாந் தபகாத்தியாத் தலமை பெற்ற நாயகமே
அகமே தெளிந்து மந்த அஹதிசமி லருள்புரிந்து
அஹம தென்னும் நாமம்பெற்ற அண்ணல்பதி யுத்தீனே. ()

காதிறருள் பெற்ற காரணைநற் பகாவே
சாதி மணிவிளக்கே ஷாகுமது ரான கோவே
நீதி நெறி யுதித்த நேச முள்ள பொற்பூவே
ஹாதி சேரச் செய்யு முகம்மில்பதி யுத்தீனே. 23.

கலாமில் வருஞ்செயல்கள் ஹக்குபாக்தி னின்ன தென்று
ஹலால் ஹறுமறியாத காதீம் பபல்தனக்கு
அலாமத்துள கன்னுசை அறுத்தொறுத்துக் காட்சிகாண
சலாமத் தருள்தாருமையா ஷாகுபதி யுத்தீனே. 24.

லாயிக்கா யிருக்குந்திரை லாமென்றெழுத்த துக்குள்
பாயுங் கதிரொளிவு பத்திநின்றடு மென்னுள்
ஓயாமலோடி மீளு முட்பொருளைக் காணெனக்கு
ஹா ஹீ ஹூ வருளுமையா ஹாதிபதி யுத்தீனே. 25.

மாவுல் ஹயாத் தருந்து மன்னர் நபிசொன்னகலி
மாவி லருள்பெறவே மறைபொருளைக் காட்டுமையா
ஆவியில் நிரம்பிநின்ற அரும் பொருளைக் காணுமல்
பாவியா காமற் காரும் பக்கீரே பதியுத்தீனே. 26.

நானு மேனாருகி நுபுவ்வத்துட னின்றோங்கித்
தானே தனியனிடந் தவம்புரிந்து வந்த நபி
தேனே விரும்பித் தெளித்து வடித்தே புசிக்க
நானே அடிபணிந்தே னுதாபதி யுத்தீனே. 27.

வரிசை மிகுதியுள்ள வள்ளல் முதாரொலிமேல்
பிரிசம் வைத்தனு தினமும் பேராசை யானேனே
அறுசிற் சென்றேறிவந்த அகமதிறசூல்பேரர்
முறுஷிதே யென்பாலருள் முகம்மதுபதி யுத்தீனே. 28.

ஹாதியே யென் கண்மணியே காரணக் கடலலையே
சோதியே சுடர்மணியே தூண்டாமணி விளக்கே

காதிம் பயுல்தனக்கு கருத்துவே றகிடாமல்
ஆதியருள் தாருமையா அகமதுபதீயுத் தீனே. 29.

லாயிலாக இல்லல்லாகு முகம்மதுற்ற சூல்லுல்லா வென்
றேயாம லோடிமீளு மோங்காரத் துட்பொருளை
வாயான் மொழியாமல் வணங்கி அருள்பெறவே
மாயாப் பொருள்காட்டு மையா மன்னர் பதீயுத்தீனே. 30

ஏகசிரா மயமா யெங்கும் பரி பூரணமாய்
வாகா யிருந்தாலும் வான்பொருளைக் காணுதற்கு
மோகித் தேன்முச்சுடரிற் முத்தி சித்தி பெற்றிடவே
ஆகந் தெளிந்தருளும் அகமதுபதீ யுத்தீனே. 31.

இந்த முனாஜாத்தை இன்பமாய்ப் பாடுவோர்க்கும்
சந்தேகந் தீர்ப்போர்க்குஞ் சந்தோஷமாய்க் கேட்போர்
சிந்தை குளிரச் சிறப்பா யனை வருக்கும்
முந்திய லிக்காவிற் சேரு முகம்மதுபதீ யுத்தீனே. 32.

யாசீ னபிகிளைக்கும் யார்கள் அஸ்காபிகட்கும் [துண்டாம்
தேசமுள்ள ஆல்களுக்குந் திரு நெடியோன்றஃமத் [கும்
தாசன் ஷெய் குதுமானுக்குந் தாய்தந்தையென்னவுலாதுக்
வாசமுள்ள பிறதவுசின் வரிசைதர ஆமீனாமீன். 33.

முனாஜாத்து முற்றிற்று.

——(:*:)——

நேரிசை வெண்பா.

பார்பூதில் யாவருக்கும் பார்ப்பதற்கு வேண்டிமனச்
சீர்மையுடன் மெய்ஞ்ஞானஞ் செப்பினேன்—ஓர் மையாய்
கற்றறிந்த பேர்களெல்லாம் ஹக்கருளு டன்வாழ்வு
பெற்றுவளர்ந் தோங்குவர்காண் பின்.

——(:*:)——

# நபியுல்லா பேரில் இன்னிசை.

—(:*:)—

பூவலவு வாசம் பொருந்தியபோ லெவ்வுயிர்க்கும்
பாவலவு பாதி பராபரன் முன்னன் மணியாய்
மேவுலகி லெல்லாம் மிகவாக வந்துதித்த
மூவுலகுங் காக்கு முகம்மதுர் றசூல் நபியே 1.

நித்தமன வஞ்சகமு நெறிகேடுந் தீவினையும்
பத்தியுடன் பூண்டசிறு பையன்முகம் பார்த்தருள்வீர்.
கத்தனருளா லடியார் கவலைபறக் காத்தளிக்கு
முத்தியுயர் மக்கா முகம்மதுர் றசூல்நபியே. 2.

என்போலப் பாவியர்க ளெத்தனைபே ரானலும்
முன்போற் கிருபையுள்ளா ரொருவரையுங் காணேனே
பொன்போ லருமணிபோற் பூங்கனிபோ லியாவருக்கு
முன்போ லுதித்த முகம்மதுற் றசூல்நபியே. 3.

வாதாடுங் கள்ளமன வஞ்சியர்கள் கஞ்சமுக
மீதாடு மாசைவினை மேலாட லெவ்விதமோ
கோதாடு புன்காபிர் கொண்டநிலைப் புண்டுவிழ
மூதாடு மின்சொன் முகம்மதுர் றசூல்நபியே. 4.

ஊரார் மணநோவ வுற்றார் மனநோவப்
பேரார் மணநோவப் பேதகத்தார் போதாரோ
சீரார் மறைநாவின் செங்கனியா லிவ்வுலக
மூரார் புகழின் மக்கா முகம்மதுர் றசூல்நபியே. 5

வன்மதியார் செய்வினையால் வன்மையிலா தாகமிகப்
புன்மதியா லெண்ணியெண்ணிப் பொங்கியுளம் வாடுவேனை
நின்மதியே பூம்பாத நாடிவந்து தாழ்ச்சிசெயு
முன்மதியே பேறருளே முகம்மதுர் றசூல்நபியே 6.

இழுக்காளர் வஞ்சநெறிக் கெட்டாமல் வந்தொரு
வழக்காளர் மாண்டமண வாடைகொண்டு சூடாரோ
மழைக்கா லசுகாபி வாய்ந்தவன மட்டாக
மூழுக் காரணங்காட்டு முகம்மதுர் றசூல்நபியே. 7.

வேதநெறி யாதிவுரை வித்தாக முத்திநிலை
பேதநெறி யென்றவொன்னார் பேர்லைந்து பாராமோர்
காதநெறி வீசுமுயர் கஸ்தூரி மேனியுங்கண்
மூதறிவு நல்கு முகம்மதுற் றசூல்நபியே 8.
திக்கலரும் கீர்த்திமதி செல்வமுடன் பெற்றாலும்
அத்தனருள் பெற்றா மருள்பெருத லெவ்விதமோ
மக்கநகர் வந்து மதீனநகர் நல்லரசு
முக்கியமாய்நின்ற வெங்கள் முகம்மதுர் றசூல்நபியே. 9.
மறையோர் நெறியோர் வழியோர் மொழிக்கிழிவே
குறையோர் குறைநோய்கள் கொண்டலைவ தெந்நாளோ
நிறையோர் சபையிலுமை நிந்தைசெய்தோ னவர்காணு
முறையோது மெங்கள் முகம்மதுர் றசூல்நபியே. 10.
தீங்குடைய வஞ்சகர்தஞ் செய்கையினை யுள்ளயர்ந்து
பாங்குடனே யெந்நாளும் பரதவிப்ப தெவ்விதமோ
தேங்கமழுங் குங்குமப்பூஞ் செழும்புயத்தீர் வாய்வழங்கா
மூங்கனுய்யக் காத்தருளு முகம்மதுர் றசூல்நபியே. 11.
பொற்காட்டு நன்மேனிப் புன்காவி தந்தநகை
வற்காட்டிக் கண்காட்டும் வஞ்சியர்க்கே யாவேனோ
விற்காட்டும் வெள்ளிமுடி மேற்காட்டிச் சிபுரீல்க்கு
முற்காட்டு மூப்புடைய முகம்மதுர் றசூல்நபியே. 12.
பொய்யுரை யுஞ்சூதும் பொல்லாங்கு நிந்தனையுங்
கையுரைகோளுந் அனியாக் கையுரையி லாவேனோ
மையுரகாப் பேசிப் பணிந்தழகு பெற்றவர
மொய்யுரை கொடுத்தாளு முகம்மதுர் றசூல்நபியே. 13.
சழக்குடையமேன்மைகொண்டுசார்புபற்றிப் பொய்கொண்
வழக்குரைக்கு மொன்னார் மதிக்கேற்ப தெவ்வினையோ [டு
வழக்கரைகொண் மாவதனை லோராயிரர்க் குமுனை
முழக்குவித்த காரணத்தின் முகம்மதுர் றசூல்நபியே. 14.
வேட்டமுறமேவும் விபரமுடன் கொஞ்சிநபங்
காட்டமுத வாய்மடவார் கண்வலைப்பட் டேங்குவனோ
காட்டகத்தின் வேடன்மதி காணப்புலி நேர்வழியே
மூட்டவருண் மூட்டுவித்த முகம்மதுர் றசூல்நபியே. 15
புன்னெஞ் சிரக்கமில்லாப் பொய்யுரையா பாற்சென்றன்
நன்னெஞ்சி னுவலெல்லா நச்சியிட லெவ்விதமோ
கன்னெஞ்சிற் கொண்டோரைக் கைதாங்கும் வள்ளலுக்கு
முன்னெஞ் சுரைத்தழைக்கு முகம்மதுர் றசூல்நபியே 16.

முற்றிற்று

பிஸ்மில்லாஹிர் றகுமானிர் றஹீம்.

இஃது

சென்னபட்டணத்திற் பிறந்துவளர்ந்துயாழ்ப்பாணம் போய்த் தமிழிலக்கணமிலக்கியம் படித்துத்தேர்ந்தவராயும் முகியித்தீன் புராணம் படித்தவராயும் தேர்ந்த மஷாயிகாயும் விளங்கும்.

## பதுறுத்தீன்புலவ ரவர்கள் பாடிய

# முனாஜாத்து.

---

அறுசீர்க்கழிலடி யாசிரிய விருத்தம்.

அலிபதின் அசிலாய்நின்ற அட்சரஞ் சுழித்து வீசிப்
பொலிவுறும் இசுக்குதாத்துட் புதைந்து ஹேமீமாய்நின்ற
அலிபெனும் இசுக்குமீறி அகதுமீம் அகுமதான
மெலிவில்லா சிபத்துள்மீமாய் வெளிதருமுகியித்தீனே. 1.

பேயலிபதனிற்சேர்ந்து பிரிந்திடும் பஹறுதன்னில்
ஸேயுடன்மீம்ஹே யானசிற்றதாம் வலம்புர்க்குள்
சேயினுக்கிஃறுபின்றிக் கிளம்பிடுந் தொனிக்குட்கண்ணே
பேயெனும்பக்காவுபெற்ற பேறுளீர் முகியித்தீனே. 2.

தந்தையுந்தாயுந்தங்கள் தாமரைப் பதமேயல்லா
லெந்தனக்கொருவரில்லை யிகன்மனத்துயரந்தீரக்
கந்தமென்கதத்தைநாளுங் காணவே காகூபியாகத்
தந்தருள்கிருபைசெய்வீர் சாகிபே முகியித்தீனே. 3.

தவாபுள அமல்கள்செய்யத் தன்னபுசறியாமூடன்
ஹவாநபுசதனிற்சிக்கிக் கலங்கியேயலைந்திடாமற்
றவாபெனும் அமலிற்சேரத் தமியனேக்காருமையா
தவாபதாந்திக்குறுக்கெல்லாம் சாகிபே முகியித்தீனே. 4.

ஜயமணிக்கொழுந்தேயெங்கள் சையிதேமுஸ்தக்கீமே
பயலிவனுங்கள்பாதப் பக்தனென்றறியவேதா
னயமிகுவஷம் சதாந்தாள் நடுவினிற்றுணைப் நிற்கும்
புயமுகமதையேகாட்டும் பூரண முகியித்தீனே. 5.

ஐயெனநிரம்பியெங்கும் ஹையுமாய்நிலைநின்றோரே
வையமீதடிமையின்றன் மனதினுட்டியராந்தீரச்
செய்பினுங் கிருபையின்னே செப்பினே னுறைத்தேனிந்தப்
பையலைக் கிருபைக் கண்ணாற் பார்த்தருள் முகியித்தீனே 6

கபியெனுந் தாத்தி னுசை கல்பினி னிலை நிறுத்தி
கபியெனுந் தாத்து தன்னைக் காணவே காஷிதந்து
கபியெனுந் தாத்திற் சேரக் கருணையங் கிருபைசெய்வீர்
கபியெனு மக்காம் அதனில் காலிறே முகியித்தீனே. 7.

தம்மலி பதனிற் சேர்ந்து தவுலத்துச் செலுத்த நாடிக்
ஹாம்மெனுங் கோட்டைக் குள்ளே குறித்த பந்திரியதான
முகம்மதுநாமம் கல்கில் முடிகலிப் பால னலென்
றெம்மிறை புகளும் வைஷகே யெங்கள்யா முகியித் தீனே. 8

தௌக்கனு பலிக்க நாடித் தம்மதி லுறவு கூடிப்
பௌக்கெனும் பார்வை யோடிப் பத்தியே உறாஜ தேறிச்
ஷௌக்கெனும் றாகு சாடிச் ஷம்சுதாத் ததனிற்கூடி
சௌக்கில்லா நுஜூல தாகக் காட்டும்பா முகியித்தீனே 9

றப்பொடு நபியுல்லாதான் ரகசியம் பேசும்போது
ஹாசப்புடனுமது நூறிற் குதுபதாய்க் கல்க்குக் கெல்லாம்
நைப்புறு முமது பேர்நாம முகியித்தீனென்
றெப்பிலா விறைவன் சொல்ல வுதித்தயா முகியித்தீனே.( )

ஸாஹிதீ னொலிகள் மற்றுஞ் சகலமாய் குதுபினோர்க்கும்
வாஹிதாம் கௌதா மென்ன வல்லவ னமைத்த கோவே
ஜாகிலென் றெனைத்தள்ளாமற் றவமுறு மக்காமு லாகூத்
தாகிய தௌக்கை யென்னுட் டந்தருள் முகியித் தீனே.( )

சீனெனுங் கண்ணடிக்குட் சிறந்தநூன் கோலமாகத்
தானெனும் வடிவு கொண்ட தாசிமா நபியின் பேரா
வானெனும் ஸனைவ பீயுள் வாயிலைத் திறந்து காணப்
பானெனுங்கிருபைக்கண்ணாற்பார்த்தருள்முகியித்தீனே.

ஷம்சொடு கமர்நுஜூமுந் தன்மனு மலக்கும் ஜின்னு
முப்பெய ருரைக்க லுற்று லுடனது வணக்கஞ் செய்யும்
நட்புத லும்மை யென்றும் நாடியே யிருக்கும் பைய
லெம்பிழைபொறுத்திப்போதிலிறங்குழ்யா முகியித்தீனே.

ஸபுறில்லாத் தவக்கல் மற்றுந் தவைமது நினையாப் பையல்
புவிதனிற் புலம்பு மாசைப் புல்லனென் றிகழ்ந்து விட்டா

ளிவன்மற் றொருவ ரில்லை யென்றுயர் தீர்ப்பதற்கே
யவையறிந் திரக்குந் தௌதுல் அஃலம்யா முகியித்தீனே

மைபுள்ள தனியா வெண்ணு நடையினு லாசை மீறிப்
பொய்தனை மிகவுங் காட்டிப் புல்லரோ டுறவு செய்து
ஐபுறு சுவால்ச்செய்யாம லடிமையென் றனக்கு முங்கள்
கைமுத லதுதந் தென்றுங் காத்திடு முகியித்தீனே 15.

தாவிமா நபியுல் லாதம் சங்கையா மொஜ்ஜுஹூக் காப்
பாவிக்கென் றெனைத்தள் ளாமல் பனுவல்பனுவதென்னும்
ஆவிலா மக்காமின் ஹாலை யடிமையுள் நடத்தல் செய்வீர்
வாவிலா வொலிகட் கெல்லாம் வள்ளலே முகியித்தீனே 16

லுல்பிது மிகவுஞ் செய்த தோஷிநா னதனுற் றங்கள்
கல்பதின் கிருபையாலே கெதிபெற வேண்டு மல்லாற்
சொல்வதற் கொன்றுங் காணேன் றய்பவ னொளியிற் சேர
நல்குநுங் கிருபையின்னே நாயக முகியித் தீனே. 17.

ஐனது தாத்து ஐனிசுருபமாய்ச் சிற்றி னுள்ளாய்
ஐனது அவ்வ லான அகுமது நபியுல் லாவின்
ஐனது ஆரி பான அஹததாம் பொருளை யென்னுள்
ஐனதாற் காஷி கான அருளும்யா முகியித் தீனே. 18.

கையெனும் ஷிற்ற தான கஸானத்தின் றிறவு கோலை
மெய்தரும் பாதைக் கெல்லாம் வளிதரும் ராஜ வாழ்வே
ஐயில்லா தடிமை யானும் ஆரிபாம் பதவி சேரச்
செய்யுமே கிருபை யென்பால் செய்யிதே முகியித்தீனே. ()

பாருலகடிமையானே படுந்துயர் தீர்த்தேயென்னைக்
காருமென் றிரங்கிக்கேட்டாற் காப்பதற்சவதியுண்டோ
நீர்மனமிரங்கிதாத்தி னிசமதாங்காஷிதந்து
பாருநுங்கிருபைக்கண்ணுற் பார்த்திடமுகியித்தீனே. 20.

குறுபதுலாகூத்தென்னுங் கோட்டையுட்புகுதச்செய்து
சுறுபதுதாத்துமாயும் சுகமதாம்ஜதுபுபெற்றுக்
ஹறுபில்லாலாமக்காமின் கனபதி வாழ்வுசேரக்
கிறுபைசெய்தருளவீரென் னுள் ஹிம்மதேமுகியித்தீனே. ()

காதிருபிலங்கிநிற்குஞ் சண்மணிதாத்துல்லாவே
ஹாதியாயெவர்க்கும்பாதை காட்டிடுமொலியுல்லாவே
ஓதியவடிமையானு முமைத்தநித்திருப்பதெல்லாம்
நீதியாய்க்கபூலதாக்கு நினைவெகேன் முகியித்தீனே. 22.

காத்தருள் புரிவீர்கௌதுல் அஃலமேகதி யென்றெண்ணி
நேத்திரிலினை விறைசை நிதமுமே நமதுபேரைத்
தோத்திரமாகச்சொல்லித் துதித்திட வடிமை யென்னுட்
பாத்தருள்கிருபைசெய்வீர் பாஹிமே முகியித்தீனே. 23.

லாமதுலிகாவாய்நின்ற தாத்தெனுந் நஅத்துள்ளே
நாமவனுகநிற்கு நாயகன் உக்குமினாலே
ஆமெனு மவுத்துவேளை யகதியத்தி சுமைமையென்னுள்
நேமமந்திரமாய்நிற்க நினைவருள் முகியித்தீனே. 24.

முத்தினுள்ளுருவாய்நின்று முழங்கிடும் தாத்தல்லாவே
யெத்திசைபுகழுமுங்க ளிருபதத்துணையைநாடுஞ்
சித்திரவடிமையென்றன் சிந்தையுட் கலககந்தீரப்
பத்திரக்கிருபைகண்ணாற் பார்த்தருள் முகியித்தீனே 25.

நூனதுமதுபியாகி நூறதாயிருக்குங்காலந்
தானெனுமிசுமைநாடி தாத்தெனும் இஷ்குப்பொங்கி
யானமுத்தலக்கதான அகுமதுநபியுல்லாவி
னூனினுள்ஷிபத்தாய்நிற்கு நூறதாமுகியித்தீனே. 26.

வல்லவனவாவினாலே வந்திடுமலுஹறுன
சொல்லுமவ்வுயிர்கட்கெல்லாந் தூயநன்முறாஷிதாக
நில்லுமென்றிறைபோனும்மை நிறுத்தியமஹபூபேயென்
அல்லலைநீக்கியென்று மருள்செய்வீர் முகியித்தீனே. 27.

ஹவாவெனுமாயைதன்னாற் காட்டியே மறைப்பதெல்லாம்
ஹவாவெனுமேலவாயிற் கடந்தப்பாலறிந்த பேர்க்கு
ஹவாவவனல்லாதில்லைக் காக்ஷியாம் ஹறுபதாகும்
ஹவாவெனும்பறுகைநீக்கிக காத்தருள் முகியித்தீனே. ()

லாமக்கானுகியெங்கும் ராப்பகலற்றுநின்ற
மீமுலாமேடைவீதி வேந்தனுங்குடியுமில்லா
தாமவட்சரங்களற்ற தாத்தெனும் பொருளைக்காண
ஆமெனுங்கிருபைசெய்வீ ராரிபே முகியித்தீனே. 29.

ஏகமாயிலங்கியெங்கு மிருந்தரசாளும்பீரே
யாகமாயொலிகட்கெல்லாம் அருள்பெறவுதித்தஷம்சே
யோகமாயேரும்வாசி யுச்சியுணிறைந்தஞானத்
தேகமாம்வாயில்தன்னைத் திறந்தருள் முகியித்தீனே. 30.

மத்துறுகின்கோலம் வரும்அப்சுகல்பின்கோலம்
ஷத்ததுகல்பதாகத் தரித்திடுங்கோலமென்ன

நற்றவப்பொருளின்சிற்றை நாடி நானறியத்தங்கள்
சித்தமதிரங்கியன்பு செய்தருள் முகியித்தீனே. 31

அந்தமுமீறுமில்லா னடங்கலும் கைபதாக
வந்தருள தமத்தென்னும் வளந்ததாத்திருளின்கோலம்
தொந்தமாய்ஸூகூனாய்நின்ற துல்லியமறிந்தகோவே
யெந்தனையிரங்கியாளு மேகமா முகியித்தீனே. 32.

ஆவதுமொன்றுமில்லா தடிமையினாசையாலே
யாவல்கொண்டுமதுபாத மடிக்கடிபுகழநாடிப் [ளுங்
பாவல்செய்திடுமென்சொல்லிற் பகர்பிழைபொறுத்தெந்நா
காவல்செய்திடுவீரெங்கும் காதிறேமுகியித்தீனே. 33.

ஆண்டவர்தமக்குண்டான அடிமையின்செயலாற்சொல்லார்
பூண்டதோர்பிழைகளெல்லாம்பொருத்தருறெந்தாய் நந்தை
மாண்டவர்பிழைபொறுத்து வல்லவன்லிக்காவிச்சேர்த்தே
ஆண்டருள்கிருபைசெய்வீ ரஹுதுயாமுகியித்தீனே. 34.

எந்தனக்கறிவுதந்தோ ரிறைகுருனோதித்தந்தோர்
வந்தெனைக்கிருபைவைத்தோர்வரும்பொருளுள்ளமீந்தோர்
தொந்தமாங்கிளையயலார் சொற்பிழைபொறுத்தென்னாளுந்
தந்தருள்கிருபைசெய்வீர் ஸமதுயாமுகியித்தீனே. 35.

பதுறுத்தீன் புலவரவர்கள் பாடிய, முனாஜாத்து-முற்றிற்று.

(:*:)

எக்கீன் சாகிபவர்கள் பாடிய

## சரஸ்வதிப் பாட்டு

கொச்சகம்.

பூவி னுதித்தவளே பூமகளே யென்தாயே
நாவி னுதித்துவர நாகரீகஞ் செய்தருள்வாய்
காவி னுதித்தவெங்கள் ஹாமிதுர சூல்பொருட்டாற்
றேவி மனோன்மணியே திருவருட்டாற் வேணு மம்மா 1.

பூவும் விசும்பும் புகழ்க்குறிய புண்ணியரை
நாவிற் புகழ்ந்துசொல்ல நல்லுதவி தந்தருள்வாய்
பாவி னுறைத்தபுன்சொற் பாடவெனக் குன்கிருபை
தாவெனவே தாழ்பணிந்தேன் றக்காக்க வேண்டுமம்மா. 2.

முத்தினடு வித்தே முகமலர்ந்த வெண்மலரே
பத்தினி பாபரியே பஞ்சாட் சரக்கிளியே
யுற்றுணர்ந்து பாடி யுனதுபதத் தாள்பணிந்தேன்
சிற்றடிய னுக்கருள்செய் சீதேவி யென்தாயே. 3.

முத்துநவ ரத்தினமே மோகனப்பெண் ணேமயிலே
நற்றவத்தி னுட்பொருளே நயனம்விழி நாயகியே
கற்றவர்க்கும் பெற்றவர்க்குங் கருவா மனோன் மணியே.
சிற்றடிய னுக்கருள்செய் சீதேவி யென்தாயே. 4.

அன்பர்க் கதியணங்கே யானந்தமா ருயிர்க்குயிரே
பொன்பரவு முத்தே பூரணசெந் தாமரையே
செம்புலக மெங்குங் கிருபைகொடுத் தாள்பவளே
துன்ப மகற்றியருள் துரைமகளே யென்தாயே. 5.

வன்ன மயிலே மாதுளஞ்செவ் வாய்க்கிளியே
பன்னகத்துக் குங்குருவே பகாரிய தங்கிலேயே
தண்ணநடைக் கோகிலமே தாபரமெய்த் தாயகியே
கண்ணின்மணி யேயெனைநீ காத்தருள வேண்டுமெம்மா. 6.

அட்ட குலமணியே யன்பருளுந் தாயகியே
வட்ட மதிமுகமே மாதுளஞ்செவ் வாய்க்கிளியே
கெட்டி மணிவிழியே கேகயமே சேவடிவே
விட்டகுறை நீக்கிவந்து வெற்றிதர வேணுமம்மா. 7.

எட்டெழுத்துந் தானு மிசைந்தெழுத்தை முன்னிறுத்தி
விட்டெழுத்துந் தொட்டெழுத்தும் விரிந்துவளர்ந்து நம
சட்டவிட்ட மாய்ச்சமைந்து தற்சுருபாய் வந்துதித்த
கட்டழகுக் கண்மணியே காத்தருள வேண்டு மம்மா. 8.

வர்த்தகர்க்கும் சிற்றவர்க்கு மாரா யமச்சவர்க்குங்
கற்றவர்க்கு மற்றவர்க்குங் கருத்தினுறைந் தேகிறைந்து
பெற்றவர்க்கும் சத்திசிவப் பெட்பருளும் பேரருளே
யுற்றருள வேண்டுமென்றே யுன்பாதத் திற்பணிந்தேன். 9.

நற்றவமெய்ஞ் ஞான நளினவிழி நீதிறந்து
சுற்றவிளக் கேற்றியென்றன் றுயரமெல்லாந் தீர்த்துலகில்
நித்த முனதுபத நேசமுடன் றந்துபணி
சிற்றடியே னுக்கருள்செய் சீதேவி யென்தாயே. 10.

ஆதி ஸரஸ்வதியே யம்மாள் மனோன்மணியே
சோதிசுரூ பத்தொளிருந் துரைமகள்நீ யென்தாயே
பாதிமதி சூடும் பாரதியே பைங் கிளியே
தேடும் வினையகற்றித் திருவருள வேண்டுமம்மா. 11.

மாதிக் கடலமிர்தே மன்னவர்க்கும் மாண்பொருளே
நாத னருட்பொருளே நாடுமடி யார்க்கருளே
வேத மணிவிளக்கே மெஞ்ஞானப் பொக்கிஷமே
சாதி மனோன்மணியே தாயேயுன் தஞ்சமம்மா. 12.

பூமலர்ந்த வாசம் போலவந்த புண்ணியமே
நாமலர்ந்துந் நாம நாடுமிந்தப் பையனுக்காய் .
வாமவும்மா வம்மா மனவாட்டந் தீர்த்திடம்மா
ஆமென வந்தாள ஆதரவு நீயென்னம்மா. 13.

வாடி மயங்குதம்மா மலைவுமெத்தத் தோணுதம்மா
தேடி யுருகுதம்மா தினமுமைய லாகுதம்மா
பேடித் தனத்தடியேன் பேதகத்தை நீயகற்றி
நாடியென் மனமறிந்தே நாட்டநிறை வெற்றிடம்மா. 14.

முன்னமே யந்நாள் முடிவாய்ச் சமைந்தபடி
யென்னைநீ யாண்டருளி யீடேற்றும் நாயகியே
பொன்னுஞ் சொன்னமோடு பொருளுமிகத் தந்தருட்செய்
யன்னமே யம்மா வருள்வாய் துரைமகளே. 15.

கோட்டங் கலிலுனது குழையிலென்ற னுமமுற்றுல்
வாட்டந் தவிர்த்தருள்வை வையகத்தி லுன்போலுண்டோ
தோட்டைக் கழட்டிவிட்டுச் சோமன்வழி யாக்கிவைத்த
தாட்டீக மானதுள்ள சரஸ்வதிநீ யென்தாயே. 16.

இந்துங் கதிரு மிசவாய்த் திரண்டு வந்தே
சிந்தை குடி கொண்டிருக்கும் சீதேவி யென்தாயே
முந்துநிறப் பத்தினியே முண்டகச்செந் தாமரையே
கொந்துநவ ரத்தினமே குவலயமெல் லாமரசே. 17.

உத்திநிறை சுந்தரியே யுனதுபத மேதேடிச்
சித்திபெற வந்தேன் திருவருளைத் தாருமம்மா
முத்துநிறம் பச்சை முழுவயிரத் தாமரைத்தாள்
நித்தம் பணிந்தேத்தி நேசம்வைத்தே னென்தாயே. 18.

ஆதி முதற்பொருளே யனைத்துயிர்க்குந் தாயகமே
சோதி மணிவிளக்கே சுடரொளியின் சுந்தரியே
போதிற் புகழ்ந்தடியே னுனதேர்செந் தாள்பணிந்தேன்
சாதிக் குலமயிலே தாயேயுன் றஞ்சமம்மா. 19.

அந்தி மதிசூடி யைந்தெழுத்தி னுள்ளுறைந்த
சுந்தரிமெய்ஞ் ஞானச் சுடரொளியின் சிந்தையுற
வந்துதவி தந்துனது மலரடிக்கா ளாக்கி யெனின்
சிந்தைகுடி கொண்டாள்வை சிதேவி யென்தாயே. 20.

வஞ்சி யிளங்குயிலே மதிதிகழுங் கண்மணியே
கெஞ்சி யழுதம்நிநங் கேட்கிலையோ கண்மணியே
பொன்னின் றிருவடியே பூமலரே பொற்கொடியே
யன்னமேயென் தோழியேயுன் னுசனமெங்கே தரிப்பாய். 21.

வன்னமணி முத்தே மாதுளஞ்செவ் வாய்க்கிளியே
பொன்னினவ ரத்தினமே பூங்கொடியே நாயகியே [ய்த்
நன்னுதலாளுன் சமுகம் நாட்டம்வைத்த தொண்டனுக்கா
தன்மையாய் வந்துதவி தந்தருள வேண்டுமம்மா. 22.

வேணுமென்றே யுன்னுமம் விசுவதித்தே யுண்மைகொண்டு
பூணுதலாய்ச் சிந்தை புகழ்ந்துபத மோதுதித்துக்
காணவெனக் கைபிடித்துக் கைத்தாளை முத்தமிட்டேன்
தோணும்படி யேயெழுந்து சொல்லவினியாருமுண்டோ.()

நாட்டம்வைத்துப் போற்றி நயனவிழி மத்தியிலாய்க்
கூட்டிச் சரத்துடனே கோகநகக் கண்டிறந்து
சூட்டுஞ் சுடரொளிவாய்ச் சுந்தரசு வுந்தரமுகங்
காட்டியெனின் கண்குளிரக் காட்சிதர் வேணுமம்மா. 24.

குன்னென்ற காவிற் குடியா யுதித்தெழுந்து
முன்னெழுந்த நானில் முளைத்தகும தாநிலையிற்
பன்னிரண்டி லொன்றுய்ப் பதிந்துவளைந் துட்பொருளாய்
மன்னிலைய தாகிவந்த மனோமணியென் னுகியே. 25.

வண்ண மயில்வடிவே மாதுளஞ்செவ் வாய்க்கிளியே
கண்யநவ ரத்தினமே கமலமுகங் கண்டுதொழத்
தென்னின் திருவடியைத் தெரிசனைய தாகவந்து
தன்னின் கிருபைசெய்வாய் தாயே மனோன்மணியே. 26.

பெற்று வளர்த்த பிதாவே பெரும்பொருளுன்
சித்த மிரங்கியருள் சீதேவி யென்தாயே
தித்தி தருங்குருவே சிவஞான மேபொருளே
மூத்திபருள் மோட்சமுற்று மோகணப்பெண் ணேகுயிலே.()

மூச்சு நடுவணையில் முகவடிவத் தோடெழுந்து
காட்சிதர வந்துதித்த கட்டழகி யென்தாயே
திட்சை மருக்கொழுந்தே சேவடிகண் டேசேவைத்
தாட்சிசெய்தா லென்வினைகள் தவிர்ந்தலைந்துபோகுமம்மா

எந்தாய் மனோன்மணியே யெனக்கு நல மானபொருள்
சொந்தமாய் வந்தருள்வாய் துரைமகளே சுந்தரியே
மந்தாரஞ்சூழ் வள்ளல் முகம்மதுற்ற சூல்பொருட்டால்
எந்தன் பிணியகற்றி யெனக்கருள வேண்டுமம்மா. 29.

கந்த மலர்ப்பாதங் கருத்துறவென் றுன்னியென்றுந்
தந்தருள வேணுமெங்கள் தாயே சரஸ்வதியே
யிந்த வுலகி லெனைப்பைய லென்றவந்தே
பந்தமொடு காத்தவர்யா ரன்னையின் நாள்முதலாய். 30.

காப்பதுநீ யல்லாமற் கற்பகமே கண்மணியே
சேர்ப்பதற்கும் நல்ல திடமருள வும்புவியிற்
பார்ப்பதற்கும் வேறெ பாவையர்க ளுண்டுகொல்லோ
தோற்பொன் றிலாதருள்வாய் சுந்தர சவுந்தரியே. 31

தொழுதுரைத்தே னிந்நாட் சுந்தரப்பொற் கற்பகமே
முழுமணியி ரத்தினமே முகதெரிச னந்தருவாய்
நழுவாப் பெருஞ்சுடரே ரத்னபரி பூரணமே
பொழுதே பிறையே புகழ்க்குரிய புண்ணியமே. 32

அங்கத் தழகோ டபரூப ரஞ்சிதமுஞ்
சிங்கத் திடையுந் திகழுமொரு சீரணியே
தங்கத் திருவடியே தாள்பணிந்த தொண்டனுக்காய்ப்
பொங்கமுடன் வந்தேநற் புத்திதர வேண்டுமம்மா. 33

புத்திதர வேணுமுன்றன் புத்திரனாய் வந்தடிமை
பத்திபொளி கண்டுதொழப் பதறிவிட்டே னென்றாயே
சத்தபரி பூரணியே சதானந்தமே யுனது
சித்த மிரங்கியருள் சீதேவி யானவளே. 34

சரஸ்வதி பாட்டு முற்றிற்று.

## முகியித்தீனாண்டவர்கள் பேரிற் முனாஜாத்து.

அறுசீர்க்கழிலடி யாசிரிய விருத்தம்

அகதியத் திருந்த சோதி யடங்கிலா வுகதத் தாகி
மிகுபுகழ் வாகி தியார் விளங்கிய வெளிவாய் நின்ற
நகைவளர் ஹக்கா னென்பா னலன்கொளும் பொருளேயெ
ககனமும் புவியும் போற்றுங்கவுதுயா முகியித்தீனே [ற்றுக

பாத்திஞய் லாகி ருகிப் பார்வையுங் கேள்வியாகி
யேத்ததோர் வாசமாகி யெடுத்ததோ ரின்ப மாகித்
தோத்திரஞ் செய்யக் கூடச் சொரூபமா யமர்ந்த சோதி
காத்ததோர் வடிவாய் வந்த கவுதுயா முகியித் தீனே 2.

தபாவத்தொன் றில்லாய நாயன் தன்றின்பமேவி வாழும்
கபகுள்ள தாறுல் குல்தில் நன்மணித் தொட்டின் மீதில்
சபுறுடன் றாயில் செய்கோவே தாக்கத்தில் லாத வேளை
கபுலத்தை யகற்று மையா கவுதுயா முகியித் தீனே. 3.

தானியாய்த் தாலி தாகிச் சாற்றவு மடங்காஞ்கி
மோனியாய் நாத்திக்காகி முகமுட னகமோ டங்க
மேனியாய் ஜிசுமா முன்ன மிதாலுமாய் நின்ற வென்றன்
கியானியா யிலகும் வாழ்வே கவுதுயா முகியித் தீனே. 4.

ஜாயிசும் வாஜிபோடு முஸ்தக்கி லான்கோலம்
ஜாயிசு முஸ்தக் கீலுஞ் ஜாபிசாய் வாஜிபாகும்
பாயிருமென்று சொல்லப் பவுசுட னறிவுறுகக்
காயிசை யகற்றுமையா கவுதுயா முகியித்தீனே. 5.

ஹாமிலா யிருப்ப தென்னே ஹபிலா யிருப்பதென்னே
ஜாமிஆ யிருப்பதென்னே சாரிமா யிருப்பதென்னே
நாமியா யிருப்பதென்னே நானிலமுழுந்தாங்கள்
காமிலா யிருப்பதாலே கவுதுயா முகியித் தீனே. 6

காதிவாய் நாளுந் தங்கள் கதமென்றன் றலைமேல் வைத்து
நாதிமா யிருப்ப தென்னே நாடின பேர்களுள்ளம
யாதுமா யிருந்து மாகி யெங்குமே நிறை பொருளாய நாளும
காதியாய் நின்ற கோவே கவுதுயா முகியித் தீனே.

தாயிமா யிறைந்து சொல்லுந்தகுதியு முடையனாகில் 7.
வாயுமால் வயிறு மாய்மேல் வழிவிடு நாவுமாகிப்
பாயமா யின்பந் துய்க்கும் பரிசுமாய் நிறைந்த கோவே
காயுமா யாளுமையா கவுதுயா முகியித் தீனே. 8.

தாத்தினில் சிபாத்து மாகித் தகைமையு முடையனாகி
லேத்ததோ ரிருதுஞ்சேர்ந்த அகுவாலும் அபுகாலும்போல்
பாத்துறு முடம்புங் கூடிப் பல்வினைச் சாளாகாமற்
காத்தருள் புரிய வென்றுங் கவுதுயா முகியித் தீனே. 9

றத்தில்லா மீட்சி யில்லா றப்பெனும் பெரும்பேரில்லா [த
வொத்தெனு மிறையோன்யார்க்குங்கத்தனு மெனுமோர்சத்
மத்தல்லால் வேறுமுண்டோ மானிடர் துன்பத்திற்குக்
கத்தனு யிருப்ப தென்னே கவுதுயா முகியித் தீனே. 10.

ஸாயிதா வினையி னாலுந் தயங்கியே நெறியில் லாமல்
பாயிதாக் காணுதாலோ பழையதென் றெண்ணத்தாலோ
நோயிலாவாழும் வாழ்க்கை நுண்மையா மெய்யா
காயிலாக் கிருபைசெய்யும் கவுதுயா முகியித்தீனே. 11.

சறுயிறு ம்வெளியுமொன்றாய்த்தாங்கியேபெரியோனுள்ளந்
தருயிருத் திரண்டசோதி தங்கிரிப் பானதாலே
மாருயிரு னதையோர் செய்கு மனுமதிலாக்கிவித்த
கருயிறில் கருயிறேநீர் கவுதுயா முகியித்தீனே. 12.

ஷாகிதுக் கானபேர்கள் சாட்சியா மல்லால் வேறு
யாகுவா ருண்டோ வாயா லுரைகுவார் கலிமாம் போலாப்
வாருட னடிமைநோதல் வழியிடஞ்சோரச் செய்யுங்
காகிறே காதி ரிய்யே கவுதுயா முகியித் தீனே. 13.

சிபாத்தொரு எழுஞ் சேரா சிபாத்தொரு எழு மேயாய்
சபாத்தரு மறுத்த வாவுங் கலந்தமோர் தோற்றமேழும்
ஒபாறகு மான்றன் ஞானீ யுடையவே சோரத்துன்பக்
சபாடத்தை யகற்றுமையா கவுதுயா முகியித் தீனே. 14

விருறிநாஙன் மனங்கனெந்து நினைத்துள் முருகிக்கண்ணுற்
சிருறெடு மருவி பாயச் சிசுமெல்லாந் துயர மென்னு
முருதுள வின்பந் துய்ப்ப முடுகுதல் தகுமோவென்னுள்
கருறுட னமருங் கோவே கவுதுயா முகியித் தீனே. 15.

தாகிரு கியதோர் மாது தனதுறு மைந்தன் செற்றுப்
போகவே யழுதவேளை புகழுட னெழுப்பி யீந்த
போகவாழ்வுடையகோறேபுண்ணியப் பொருளேயென்றன்
காகநோய் போக்குமையை கவுதுயாமுகியித்தீனே. 16.

னுல்முலே நடந்து நித்தஞ் சொல்லொணப் பாவந்தேடி
இல்முலே யிணங்காதாக்கை யெடுத்தோர் பிணியால்வாடி
நல் முனஜாத்துஞ் செய்ய நலந்தெரி யாதபாவி
கன்மநோய் போக்குமையா கவுதுயா முகியித் தீனே. ()

ஆரிபீனன பேர்க ளடங்கலுந் துதிக்கத் தக்க
நோமையே கொண்டபாத ரினைக்குமுன் ஜனன பாவந்
தீருமே தங்கள் காதிம் செய்லகு வாலேப்பார்க்க
காருமே கடைக்கண் பாருங் கவுதுயாமுகியித்தீனே. 18.

காயிதுக் கிருக்க வெண்ணுங் கருத்துள செய்கைக் கூலி
வாயுரை கேட்பதாக மருங்கினில் விடுத்துத் துன்பத்
தீயினையகற்றி விட்ட தேவரீர் திருப்பேராணை
காப்பினி போக்கு மையாகவுதுயா முகியிதீனே. 19.

பகுமில்லா தொருஜின் கொண்டுபோனதோர் பாவைதன்னை
யகமியப் பொருளைச்சொல்லி யவடந்தைக் கறிவித்தின்ப
மிகையுடன் றேவைக்கண்டு மெல்லியுங் கிடைக்கச்செய்த
கருதியே சாண மையா கவுதுயா முகியித்தீனே. 20

குற்றத்து ஜனி யாகக் குவலயத் துதித்த வள்ளல்
துற்றத்துல் பைலா வானோர் பேர்வழித் தோற்ற மல்ப
மற்றத்து நாமஞ் சொல்லில் வருமொருவுதவி யென்றீர்
கற்றத்தொன் றிலாத சிகாவே கவுதுயா முகியித்தீனே. 21,

கபீதும் நீர் ஜிசுமும் நீரே ஐகனுநீர் கல்புமநீரே
சுபுகும்நீர் மிதாலும் நீரே சுன்துமநீர் பறாலும் நீரே
அபதும்நீர் அசலும் நீரே ஆலிம்நீர் இல்முமநீரே
கபீறும்நீரான கோவே கவுதுயா முகியித்தீனே. 22.

லாஇலாகாவை நீக்கி நாட்டும்இல் லல்லா தன்னில்
கூயிரு தத்திற் பூட்டிக் கூட்டித்தம் பன்னி ரண்டின்
மாயிலா தத்தைச் சேர்த்தி மன்னிய கல்பி லூன்றிக்
காயிலா திருக்கச் செய்யும் கவுதுயா முகியித்தீனே. 23.

மீமதே முகம்ம தாகி முகம்மதே அகும தாகி
மீமிலா தகதுமாகிமேவுமூன் றெழுத்தி னின்றும்
ஆமெனுந் தொனியுஞ் சொன்ன அலிபினுக்கத்துந்தானாய்
காமிதும் ஹது நீரே கவுதுயா முகியித்தீனே. 24.

நூறினி னுறும் நாறில் நுண்ணிய புனலும் நீரிற்
கூறிய மணலு மண்ணிற் குறித்தெழும் ஆதமாகித்
தேரிய இசுக்கே ஹவ்வாத் தியங்கிய வொடுக்கமக்கள்
காறியே யெதிலுநாளுங் கவுதுயா முகியித்தீனே. 25.

ஓயிலெனு நரகந் துன்ப முயரத னின்பமாக
மயமுறு மிருளும் வெள்ளி மருவின வினையும் பற்றி
நயமுற வவட்கை வைத்தால் நாடிய நபுசுசிக்கிக்
கயமுறு மாகக்காரும் கவுதுயா முகியித் தீனே. 26.

கூவதே ஞ்சியுமாகிக் கூவதே காவிலாகிக்
கூவதே காதி ருகிக் கூவதேஸமீருமாகிக்
கூவதே பசிறு மாகிக் கூமுத்தக ல்லி மாகிக்
கூமுரீ தானகோவே கொவ்வுதுயா முகியித்தீனே. 27.

ஏயதே மூலமாக எடுத்ததோர் றாகு மேவுங்
காயமா மிதனைக் காணக் கருத்திட னறிவு நல்கி
மேயதோர் தீங்குறூது மீறிய கிருபை நல்கிக்
காயுமா [illegible]ளுமையா கவுதுயா முகியித் தீனே. 28.

வான்வளர் வெள்ளி யென்ன வரிசையி னிருபத் தேழாய்த்
தான்வருமெழுத்தும் பற்றித் தகுதியின் பாடல்செய்தான்
கோனருள் அப்துல்காதிர் கொண்டன்மென் ஹபீபுலப்பை
தேனினு மினிய பிள்ளை ஷெய்கப்பதுல் காதி றன்றே. 29.

முகியித்தீ னாண்டவர்கள் பேரில்-முனாஜாத்து முற்றிற்று.

——[*]——

## முகியித்தீனாண்டவர்கள்பேரில்-இன்னிசை.

ஆதியரு ளோங்கு மண்ணல்நபி பேரரெனப்
பூதலங்க ளெல்லாம் புகழவரும் புண்ணியமே
மாதவங்கள் செய்யு மகத்துவர்கள் கண்மணியாய்க்
காதலாக வந்துதித்த கவுது முகியித்தீனே. 1

உள்ளமிகக் கலங்கி யுண்ணு துணர்வழிந்து
தள்ளுந் துயரரும்பத் தாங்கா துழல்வதுவோ
கொள்ளைகொள்ளும்வெம்பூதக்கொடுமைபொடுவஞ்சகமுங்
கள்ளமெல்லாம்போக்குங் கவுது முகியித்தீனே. 2.

ஊக்கமிகத் தளர்ந்தே யோயாது பாழ்க்கவலை
யேக்கமது கொண்டடியா ரேங்கித் தயங்குவரோ
தேக்குமுயர் மெய்ஞ்ஞானச் செழுஞ்சுடரா யிவ்வுலகங்
காக்குதற்கு வந்துதித்த கவுது முகியித்தீனே. 3.

நெஞ்சமிகக் கலங்கி நினைவழிந்து நும்மடியார்
தஞ்சமொன் றுக்காணரிதாய்த் தவக்கங்கொண்டு நிற்பாரோ
மஞ்சுதவழ் பூஞ்சோலை பகுதுதாது நாயகமே
சஞ்சமலர்த் தாளருளும் கவுது முகியித்தீனே. 4.

சிந்தித்துஞ் சிந்தை செயலழிந்து நும்பாதம்
வந்தித்து முள்ள மறுகிக் கலங்குவதோ
சந்ததத்துத் திண்டோட் டாராதிபரே நம்மையெல்லாங்
கந்தித்த நாயகமே கவுது முகியித்தீனே. 5

வெம்பித்த வஞ்சனையின் வெங்கடியா லுள்ளமெல்லாஞ்
சம்பித் தவக்கங்கொண்டு தத்தளித்து வாவெதோ
தம்பத்தின் வந்துதித்த தாபரமே பன்மையெல்லாங்
கம்பித்து நின்றவெங்கள் கவுது முகியித்தீனே. 6.

வாட்டம் படமனமும் வன்மைபட வுள்ளமெல்லாங்
கோட்டம் படவடியார் கொண்டதுய ராற்றுவரோ
நாட்டம் படமகிழ்ச்சி நல்லுடல் வளம்பெறவே
காட்டும் பதிநிதியே கவுது முகியித்தீனே. 7.

நீரா ருெலித்தோட நெஞ்சகத்துங் கண்ணிட்டதுங்
கோராற்றிஞ லெளியோர் கொள்ளுந்துயர் போக்குமையா
பாராருங்கீர்த்திப் பதிஜயிலான் மன்னவரே
காராரு நன்கருணை கவுது முகியித்தீனே. 8.

மைந்தரொடு மெந்தையரு மக்களொடு சுற்றங்களுந்
தந்தமனமே வெறுக்குந் தற்காலம் போக்குமையா
சிந்தைவள ரானந்த ஜெயிலானி நன்னகரா
கந்தமலர்த் தாளருளுங் கவுது முகியத்தீனே. 9.

கோப்புடைய கவங்கடியின் கோட்டி யணுவும் மணுகா
நீர்ப்புடையாரு ம்மையல்லா னிணிலத்தில் வேறிலையே
யேப்புடைய பூதமெல்லா மெப்புறத்து நாடாது
காப்புடைய வல்லவரே கவுது முகியித்தீனே. 10

ஓ்ராயி ரத்தினுங்க ளுயர் நாமமே யுரைத்தாற்
றீராத வன்மையெல்லாந் தீர்த்துமுன்ன மெய்துவனென்
ரூரா ரமிர்தமொழி யப்படியா மிப்படியேன்
காரார் தவப்பேறே கவுது முகியித்தீனே.

முகியித்தீனாண்டவர்கள்பேரில்-இன்னிசை முற்றிற்று.

---

# புதிதாய் வெளிவந்து யிருக்கும்

## புஸ்தக விளம்பரம்.

| | | | |
|---|---|---|---|
| பஅுந்தநூறல் ஹூதா தர்சுமா யாஸையிதீ மாலை கிரையம். | 0 | 4 | 0 |
| பஅுந்தநூறல் ஹூதா தர்சுமா முன்னோர்கள் பாடிய 12-முனாஜாத்துகளும் முகியித்தீன் மாலையித 3-னும் சேர்ந்தது, ... ... விலை | 0 | 12 | 0 |
| அபூநவாஸ் விகட களஞ்சியம். ... ,, | 0 | 12 | 0 |
| யாஸைதீமாலை இதுவுடன் முன்னோர்கள் பாடிய முனாஜாத்தும் சேர்ந்தது ... | 0 | 12 | 0 |
| இராஜமணிமாலையும், முஹிதீன்மாலையும் சேர்ந்தது | | | |
| கலிகோ ... ... | 1 | 0 | 0 |
| ஷை தோல் ... ... | 1 | 4 | 0 |
| முஹம்மதுஹனீபா கிஸ்ஸா ... ... | 0 | 4 | 0 |
| பீருல் ஆலம் சண்டை ... ... | 0 | 2 | 0 |
| கான்சாயபுசண்டை ... ... | 0 | 2 | 0 |
| நூர்ஷஹாதத்து ... ... | 0 | 4 | 0 |
| காசிம்படைப்போர் ... ... | 0 | 0 | 9 |
| ஷை படைவெட்டு ... ... | 0 | 0 | 9 |
| பைத்துல் முகத்திஸின் யுத்தசரித்திரம் | | | |
| முதற்பாகம் ... ... | 1 | 0 | 0 |
| ஷை 2-ம்பாகம் ... ... | 1 | 0 | 0 |
| அமீர்ஹம்ஜாஜங் கதை 1-வது ... | 1 | 8 | 0 |
| ஷை 2-வது ... ... | 1 | 8 | 0 |
| ஷை 3-வது ... ... | 1 | 8 | 0 |
| ஷை 4-வது ... ... | 1 | 8 | 0 |
| சர்கூன் படைப்போர் ... ... | 0 | 2 | 0 |
| நேர்வழி விளக்கம், தீன்பணி விளக்கம் ... | 0 | 12 | 0 |
| ஷை திக்குகடிதம் ... ... | 1 | 0 | 0 |
| ஷை கிளேஸ் கடிதம் ... ... | 1 | 4 | 0 |
| சமானுண்மை இஸ்லாம் நன் ... | 0 | 8 | 0 |
| சத்திய இஸ்லாத்தின் முன்னறிவிப்பு ... | 0 | 6 | 0 |
| உகூகுல்முஸ்லிமீன் ... ... | 0 | 1 | 0 |

| | ரூ. | அ. | பை. |
|---|---|---|---|
| உம்தத்துல் இஸ்லாம்கிளேஸ் ... ... | 2 | 0 | 0 |
| அஹ்காமுல் இஸ்லாம் ஹனபிய்யாசுத்தப்பதிப்பு | 0 | 4 | 0 |
| ஷை ஷாபிய்யா ... ... | 0 | 4 | 0 |
| நவஸீஹத்துல் இஸ்லாம் ஹனபிய்யா ... | 0 | 2 | 6 |
| ஷை சுத்தப்பதிப்பு ... ... | 0 | 4 | 0 |
| ஷை ஷாபிய்யா ... ... | 0 | 2 | 0 |
| ஷை சுத்தப்பதிப்பு ... ... | 0 | 4 | 0 |
| தன்பீஹுஸ் ஸாலிகீன் ... ... | 1 | 0 | 0 |
| ஹிதாயத்துஸ் ஸாலிகீன் ... ... | 1 | 0 | 0 |
| வெள்ளாட்டி மஸாலா றப் ... ... | 0 | 6 | 0 |
| ஷை திக்கு ... ... | 0 | 8 | 0 |
| மேற்படி கிளேஸ் ... ... | 0 | 10 | 0 |
| நூறு மஸாலா ... ... | 0 | 2 | 0 |
| மேற்படி சுத்த பதிப்பு ... ... | 0 | 4 | 0 |
| ஆயிரம் மஸாலா ... ... | 0 | 4 | 0 |
| ஷை திக்குகடிதம் ... ... | | 8 | 0 |
| ஹகிக்கத்துல் இன்ஸான் இது இன்ஸான் படையுண்டகோலத்தின் படத்துடன் அநேக தௌஹீதுகளும் அடங்கியது ... | 2 | 0 | 0 |
| தொழுகைரஞ்சித அலங்காரம் ... | 0 | 2 | 0 |
| ஷை 2-ம் பாகம் ... ... | 0 | 2 | 0 |
| தொழுகை அடவு சுத்தப்பதிப்பு ... | 0 | 1 | 0 |
| தொழுகை நாமா ... ... | 0 | 0 | 9 |
| பறுஹுமாலை ... ... | 0 | 0 | 9 |
| 5-ந்து கலிமா தர்சுமா பெண்கள் நேர்வழி விளக்கம் | | | |
| பெண்புத்தி மாலை ... ... | 0 | 2 | 0 |

முற்றிற்று.

இப்படிக்கு,

எஸ். எம். முஸ்தபா லெப்பை,

மானேஜர் இஸ்லாமிய்யா,

பிரசங்கநேசன் ஆபீஸ்

நெ. 16. சூராப்ப முதலி தெருவு,

திருவல்லிக்கேணி மதறாஸ்.